மே - ஜூன் 2025

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



# 77ஆம் ஆண்டில் எழுச்சியடையும் இஸ்ரயேல்

- அமலேக்கியர் மற்றும் பிறர் மீதான நியாயத்தீர்ப்பு
- சமீபத்திய நிகழ்வுகள்
- மறுபுறம்
- தீர்க்கதரிசனத்தின் பொற்காலம்
- வரவிருக்கும் உடன்படிக்கை
- புல் மீது மழை
- தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள்
- இராஜியத்திற்கு ஆயத்தப்படுத்துதல்

# 77ஆம் ஆண்டில் எழுச்சியடையும் இஸ்ரயேல்



## ஆதியிலே

நம் ஹெரால்டின் மே/ ஜூன் 2020 ஆம் இதழ், 1878 முதல் இஸ்ரயேலின் மறுசீரமைப்பின் ஏழு படிகளை கோடிட்டுக் காட்டியது, எசேக்கியேல் 37 இல், உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கை பற்றி விரிவாக காட்டப்பட்டது. இது 1878 முதல் 2020 வரையிலான தீர்க்கதரிசனங்களின் நிறைவேற்றத்தைக் குறிப்பிட்டது.

ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகும், பொருளாதார, விவசாய மற்றும் இராணுவ சக்தியாக நாடுகள் மத்தியில் இஸ்ரயேலின் எழுச்சி தொடர்கிறது. இருப்பினும், இஸ்ரயேலில் பலர் இன்னும் அதன் ஆசீர்வாதங்களின் மூலமாக தேவனை அங்கீகரிக்கவில்லை. இஸ்ரயேல் இராஜ்யத்தில் மலைகளின் (தேசங்களின்) உச்சியில் இருக்கும் என்று ஏசாயாவும் மீகாவும் தீர்க்கதரிசனம் உரைத்தனர். தேவனின் வார்த்தை எருசலேமிலிருந்து மனுக்குலத்திற்கு எவ்வாறு பரவும் என்பதை அவர்கள் விரிவாகக் கூறிகின்றனர். இன்று முதல் மகிமையான எதிர்காலம் வரை இஸ்ரயேலில் என்ன நடக்கும் என்பதை விவரிக்கும் வேதவசனங்களை இந்த இதழ்பரிசீலிக்கிறது.

"**அமலேக்கியருக்கும் மற்றவர்களுக்கும் எதிரான நியாயத்தீர்ப்பு**" என்ற பாடம் இஸ்ரயேலின் இன்றைய எதிரிகளின் தோற்றத்தைப் பற்றி விவாதிக்கிறது. பெலிஸ்தியர்கள் எங்கிருந்து வந்தார்கள் ? அமலேக்கியர் யாராவது எஞ்சியிருக்கி றார்களா ? ஆமான் ஒரு அமலேக்கியனா ? இந்தக் கட்டுரை இஸ்ரயேலை அழிக்க முயற்சிப்பவர்க ளையும் ஆராய்கிறது. "**இஸ்ரயேலின் எல்லைகளின் விரிவாக்கம்**" என்ற பாடம் இஸ்ரயேலின் எல்லை களை வரையறுக்கும் வேதவசனங்களை ஆய்வு செய்கிறது. காசா பொருத்தமானதா ? இஸ்ரயேல் யூதேயா மற்றும் சமாரியாவை உள்வாங்குமா ? இஸ்ரயேலின் எல்லைகள் யோர்தான் மற்றும் லெபனானை எவ்வாறு பாதிக்கும் ? யூத குடியேறிகளின் பெரும் வருகையை அந்த நிலம் எவ்வாறு தாங்கிக்கொள்ளும்?

"**சில வாய்ப்புகள்**" என்ற பாடம் இஸ்ரயேலின் எல்லைகள் குறித்து மாற்று சாத்தியக்கூறுகளைக் பரிசீலிக்கிறது. இந்த இரண்டு கட்டுரைகளும் தற்போதைய நிகழ்வுகளைப் பார்ப்பதற்கான வேதப்பூர்வ கண்ணோட்டத்தை வழங்குகின்றன.

"**சிதறடிக்கப்பட்ட மீதமுள்ளவர்கள் திரும்புதல்**" என்ற பாடம் ஏசாயா 11:11-12 எவ்வாறு நிறைவேறும் என்பதற்கான நான்கு காட்சிகளை ஆராய்கின்றன. இது யூதர்கள் தேவனின் அழைப்புக்குக் கீழ்ப்படிந்து தங்கள் நம்பிக்கையின்படி திரும்ப அனுமதிக்கும் யெகோவா தேவனின் படிப்படியான வேலையைக் காட்டுகிறது. தீர்க்கதரிசனமாக "தேசங்களுக்கான கொடி" என்ன?

"**இஸ்ரயேலில் புதிய உடன்படிக்கையைப் பயன்படுத்துதல்**" என்ற பாடம், புதிய உடன்படிக்கையைப் பெற இஸ்ரயேலை தேவன் தயார்படுத்தும் நடை முறை வழியைக் கருத்தில் கொண்டு, இஸ்ரயேல் இன்னும் தயாராக இல்லை என்பதற்கான காரணத்தைக் குறிக்கிறது. முற்பிதாக்கள் மற்றும் வேத சீயோனியர்களின் பங்கு என்னவாக இருக்கும்? "தேவனுடைய இராஜ்யத்தில் நுழையும் இஸ்ரயேல்" என்ற பாடம், இஸ்ரயேலில் இராஜ்யம் திறக்கப்படவது தொடர்பான தீர்க்கதரிசனங்களையும் காட்சிகளையும் பரிசீலிக்கிறது.

"**இஸ்ரயேல், தேவனின் சுதந்தரம்**" என்ற பாடம், ஏசாயா ஐ ஆராய்ந்து, இஸ்ரயேல் தேவனின் சுதந்தரம் என்பதன் அர்த்தத்தை விளக்குகிறது. கிறிஸ்து, சபை மற்றும் முற்பிதாக்கள் மூலம் இஸ்ரயேலை நேசிக்கவும் அவளுடன் மகிழ்ச்சியடையவும் உலகத்தை தேவன் அழைப்பார். "**இஸ்ரயேலின் பரிசுத்தமாக்குதல்**" என்ற பாடம், தேவன் தனது பரிசுத்த நோக்கத்திற்காக இஸ்ரயேலை அவர்களுக்குத் தெரியாமலே அவர்களை உலகத்திலிருந்து எவ்வாறு பிரித்து வைக்கிறார் என்பதைக் கருத்தில் கொள்கிறது. இஸ்ரயேலில் தேவனின் பணி, சுவிசேஷ யுக சபையை பரிசுத்தப்படுத்தும் பணியிலிருந்து எவ்வாறு வேறுப்பட்டது? பின்வரும் வேதப்பூர்வ வாக்குறுதிகளையும் ஆதாரங்களையும் நாம் வழங்குகிறோம். இஸ்ரயேலின் அமைதிக்காகவும் உங்கள் விசுவாசம் பலப்படுத்தப்படவும் நாம ஜெபிக்கிறோம்.


**அமலேக்கியர் மற்றும் பிறர் மீதான நியாயத்தீர்ப்பு** 2
பண்டைய தீர்ப்புகள்

**சமீபத்திய நிகழ்வுகள்** 7
இஸ்ரயேலில் எல்லைகளின் விரிவாக்கம்

**மறுபுறம்** 15
சில விருப்பத்தேர்வுகள்

**தீர்க்கதரிசனத்தின் பொற்காலம்** 19
சிதறடிக்கப்பட்ட மீதியானவர்கள் திரும்பி வருதல்

**வரவிருக்கும் உடன்படிக்கை** 26
இஸ்ரயேலில் புதிய உடன்படிக்கையை வரிசைப்படுத்துதல்

**புல் மீது மழை** 32
இஸ்ரயேல், கடவுளின் சுதந்தரம்

**தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள்** 37
இஸ்ரயேலில் பரிசுத்தமாக்குதல்

**இராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்துதல்** 43
இஸ்ரயேலில் பரிசுத்தமாக்குதல்

**பின் அட்டை**
நம்பிக்கையின் பள்ளத்தாக்கு

பண்டைய தீர்ப்புகள்

# அமலேக்கியர் மற்றும் பிறர் மீதான நியாயத்தீர்ப்பு



— Jim Parkinson

"பின்பு கர்த்தர் மோசேயை நோக்கி ... அமலேக்கை வானத்தின் கீழெங்கும் இராதபடிக்கு நாசம் பண்ணுவேன் என்றார்.... தலைமுறை தலைமுறைதோறும் அவனுக்கு விரோதமாய் கர்த்தரின் யுத்தம் நடக்கும் என்றான்" (யாத்திராகமம் 17:14-16)

## அமலேக்கியர்களும் பெலிஸ்தர்களும்

அமலேக் ("ஒரு பள்ளத்தாக்கில் வசிப்பவர், ஸ்மித்தின் பைபிள் அகராதிSmith's Bible Dictionary) ஒரு மறுமனையாட்டியின் மூலம் ஏசாவுக்கு பிறந்த பேரன். (ஆதியாகமம் 36:10-12)அவரது சந்ததியினர் சீனாய் பாலைவனத்தில் மந்தைகளையும் கால் நடைகளையும் வளர்த்தனர். இஸ்ரயேல் அகதிகள் முதன் முதலில் எகிப்திலிருந்து தப்பி ஒடியபோது, அமலேக்கியர் அவர்களைப் பதுங்கியிருந்து தாக்கினர் (ஆனால் தோற்கடிக்கப்பட்டனர்)இதன் விளைவாக, யேகோவா தேவன் அவர்கள் அழிவார்கள் என்பதை அவர் ஆணையிட்டார்.(யாத்திராகமம் 17:8-16) பின்னர் அமலேக்கியரின் வல்லமையை இராஜாவான சவுல் முறியடித்தார், அவர் கடவுளின் கட்டளையை மீறி, அவர்களின் இராஜாவான ஆகாகையும், அமலேக்கிய மந்தைகளில் சிறந்தவற்றையும் காப்பாற்றினார். (1சாமுயேல் 15)

பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, எஸ்தர் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளபடி, ஆகாகியனான ஆமான் (அநேகமாக அமலேக்கிய இராஜாவான 1ஆகாகின் வம்சாவழி) { எஸ்தர் 3:1, 3:10, 8:3, 5, மற்றும்9:24 ஆகிய வசனங்கள் அனைத்தும்"ஆமான் ஒரு அகாகியன்" என்று குறிப்பிடுகின்றன, இது அவர் அமலேக்கியனான ஆகாகின் இராஜாவின் சந்ததியில் வந்தவராக இருக்கலாம் என்பதைக் குறிக்கிறது. இந்த வம்சாவழி வேதங்களில் திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும், இது யூத மரபில் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, பூரிம் பண்டிகைக்கு ஒரு அர்த்தத்தை சேர்க்கிறது.மெகில்லா 13 - டிராக்டேட்டில் உள்ள டால்முட்டில், - ஆமான் அமலேக்கிய மன்னராக ஆகாகின் வழித்தோன்றல் என்று கூறுகிறது. இது ஆமானின் வம்சாவழியை சவுல் ஆகாகைக் காப்பாற்றிய வேதாகம சான்றுகளுடன் இணைக்கிறது. (1சாமுயேல் 15)}

பெர்சியர்களை கொண்டு அனைத்து யூதர்களையும் அழிக்க முயன்றபோது சவுலின் கீழ்ப்படியாமை இஸ்ரயேலர்களைப் புண்படுத்தியது. இன்று, அமலேக்கியர்களை ஒரு ஜனங்களாக நாம் இனி அடையாளம் காண முடியாது. பெலிஸ்தர்களுக்கு ("குடியேறியவர்கள்", ஸ்மித்தின் பைபிள் அகாராதி 2"immigrants," Smith's Bible Dictionary(2){"பெலிஸ்தர்" என்ற வார்த்தையின் சொற்பிறப்பியல் நிச்சயமற்றது என்று ஸ்மித்தின் பைபிள் அகராதி கூறுகிறது, ஆனால் அது "குடியேறியவர்கள்" அல்லது "அந்நியர்கள்" என்று பொருள்படும் பெலேஷேத் என்ற எபிரெய வார்த்தையுடன் தொடர்புடையதாக இருக்கலாம். } வேறுப்பட்ட வரலாறு உள்ளது. அவை ஆபிரகாமின் காலத்திலேயே இருந்தது. (ஆதியாகமம் 21:32-34, 26:1)தீர்க்கதரிசி ஆமோஸ் பெலிஸ்தரை கப்தோர் பகுதியுடன், அநேகமாக கிரீத் பகுதியுடன் தொடர்புப்படுத்துகிறார். (ஆமோஸ்9:7)எரேமியா பெலிஸ்தியர்களை "கப்தோர் தேசத்தில் எஞ்சியவர்கள்" என்று குறிப்பிடுகிறார். (எரேமியா47:4 )

இது தொல்பொருள் சான்றுகளுடன் ஒத்துப்போகிறது, இது பெலிஸ்தர்கள் ஒரு கடல் வாழ் மக்கள்என்று கூறுகிறது. {Eric H. Cline, 1177 BC: நாகரிகம் சரிந்த ஆண்டு. (Princeton: Princeton University Press,2014): கிளைனின் புத்தகம் Cline's book பிற்கால வெண்கல யுக சரிவு மற்றும் கடல் மக்களின் பங்கு பற்றிய விரிவான

கண்ணோட்டத்தை வழங்குகிறது. தொல்பொருள் மற்றும் உரை ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்த படையெடுப்பாளர்களில் பெலிஸ்தியர்களை ஒரு குழுவாக அவர் விவாதிக்கிறார்.

● Pages 23-26:மெடினெட் ஹபுMedinet Habu inscriptions கல்வெட்டுகளைக் குறிப்பிடுகையில், பெலிஸ்தியர்கள் கடல் மக்கள் குழுக்களில் ஒன்றாக இருப்பதற்கான ஆதாரங்களை அவர் விவாதிக்கிறார்.

● Pages 61-65: பிலிஸ்திய தளங்களிலிருந்து தொல்பொருள் சான்றுகளை கிளைன் Cline ஆராய்கிறார், அவற்றில் ஏஜியனுடன் இணைக்கும் தனித்துவமான குயத்தொழில் பாணிகள் அடங்கும். அசா..ப் யாசூர்- லாண்டாவ்,Assaf Yasur-Landau பிலிஸ்தியர்கள் மற்றும் ஏஜீயன் பிற்கால வெண்கல யுகத்தின் முடிவில் இடம்பெயர்வு (Cam-bridge: Cambridge University Press, 2010)இந்தப் புத்தகம் பெலிஸ்தியர்களின் தோற்றத்திற்கான தொல்பொருள் சான்றுகளை ஆராய்கிறது, அவர்களின் பொருள் கலாச்சாரத்தை ஏஜியன் உலகத்துடன் இணைக்கிறது மற்றும் கடல் மக்கள் குழுவாக அவர்களை அடையாளம் காண உதவுகிறது.

● Pages 35-70: அவர் பெலிஸ்திய தளங்களிலிருந்து தொல்பொருள் சான்றுகளைப் பற்றி விவாதிக்கிறார், குயத்தொழிகள், கட்டிடக்கலை மற்றும ஏஜியன் தொடர்பை சுட்டிக்காட்டும் பிற கலாச்சார கூறுகளில் கவனம் செலுத்துகிறார்.

● Pages 191-221: யசூர் - லாண்டாவ் Yasur-Landau பெலிஸ்திய குடியேற்றம் மற்றும் குடியேற்ற முறைகளுக்கான ஆதாரங்களை பகுப்பாய்வு செய்து, அவற்றை கடல் மக்களின் பரந்த சூழலுடன் இணைக்கிறார்.

● Pages 317-347: அவர் தனது வாதங்களைச் சுருக்கமாகக் கூறி, பிற்கால வெண்கல யுக சரிவுக்கு பங்களித்த ஏஜியன் குடியேற்றங்களின் ஒரு பகுதியாக பெலிஸ்தியர்கள் இருந்திருக்கலாம் என்று முடிவு செய்கிறார்.}

சாண்டோரினியில் (வெளியேற்றத்தின் போது) எரிமலை வெடிப்புகள், கிரீட்டில் மினோவான் நாகரிகத்தை முடிவுக்கு கொண்டுவந்த பிறகு, இந்தக் கடல் மக்களில் அதிகமானோர் பெலிஸ்தியாவிற்கு வந்திருக்கலாம்.

இஸ்ரயேலின் நியாயாதிபதிகள் மற்றும் இராஜாக்கள் இருவரின் ஆட்சிக் காலத்திலும் புலம்பெயர்ந்த பெலிஸ்தியர்கள் இஸ்ரயேலுக்கு தொடர்ச்சியான அச்சுறுத்தலாக இருந்தனர். பிந்தைய ஆண்டுகளில், எசேக்கியா அவர்களின் அதிகாரத்தை முறித்தார். (2இராஜாக்கள் 18:8) அந்த நாட்டில் இன்று இருக்கும் சில அரேபியர்கள், எவரும் தங்கள் வரலாற்றை பெலிஸ்தியர்கள் அல்லது அமலேக்கியர்களிடம் இருந்து அறியலாம்.

**நவீன காசாபகுதி**





பால்கன் தீபகற்பத்தில் 1875 ஆம் ஆண்டு கிறிஸ்தவ கிளர்ச்சியை ஒட்டோமான் (துருக்கிய ) பேரரசு அடக்கியது, ஆனால் அக்டோபர் 1875இல் திவால் நிலையை அறிவித்தது.

இவ்வாறு, 1878 ஆம் ஆண்டில், பிரிட்டனின் பிரதமர் பெஞ்சமின் டிஸ்ரேலி 1878 ஆம் ஆண்டில் பாலஸ்தீனத்தில் நிலத்தை விற்க வலியுறுத்தியபோது, பாஷா தயக்கத்துடன் தயாராக இருந்தார்.

பின்னர் யூதர்கள் யார்கான் நதிக்கு அருகில் நிலம் வாங்கினர், ஐரோப்பிய யூதர்கள் நவம்பர் 3, 1878 அன்று பெட்டாக் டிக்வாவாக மாறிய இடத்திற்கு வந்தனர். அதன் பிறகு சிறிது நேரத்திலேயே மலேரியா அந்த நகரத்தை மக்கள் தொகையற்றதாக்கியது, கொசுக்கள் குறைவதால் அவை மீண்டும் இங்கு வர முடியும். இன்று, இது இஸ்ரயேலின் ஐந்தாவது பெரிய நகரமாகும்.

பின்னர் யூதர்கள் வடக்கு கடற்கரையிலும், எஸ்ட்ரேலோன் சமவெளியிலும், வடக்கே ஜோர்டான் நதியின் அருகாமையிலும், எருசலேம் மற்றும் பெயெர்செபாவுக்கு அருகிலும் சில நிலங்களை வாங்கினார். கிழக்கு ஐரோப்பிய படுகொலைகளிலிருந்து தப்பி ஓடியதால், புதிதாக வாங்கப்பட்ட இந்த நிலங்களில் வேலை செய்ய அதிகமான யூதர்கள் வந்தனர். அவர்கள் தொழில்நுட்பத்தையும் கொண்டு வந்தார்கள், அதனால் அவர்கள் செழித்தார்கள்.

சில அரபு நாடுகள் யூதர்கள் திரும்பி வருவது குறித்து கவலைப்பட்டன.எனவே, உலக யூதர்கள் அலியாவை (இஸ்ரயேலக்கு "மேலே செல்லுங்கள்") விட வேகமாக எகிப்தியர்களும் அரேபியர்களும் நிலத்தை கைபற்ற முடியுமா என்று பார்க்க போட்டி நடந்து கொண்டிருந்தது.

முதன்மையாகப் பாழடைந்த நிலமாக இருந்த ஒன்று, இப்போது அரேபியர்களால் ஒரு அரசியல் பரிசாகக் கருதப்பட்டது. இடைவிடாத போர்கள் யூதர்களால் வாங்கப்பட்ட நிலங்களை அபகரிக்கத் தொடங்கியது மட்டு மல்லாமல், அவர்களை கடலுக்குள் விரட்டவும் தொடங்கின - இது இனப்படுகொலையின் மற்றொரு வடிவம் !

இருப்பினும்," அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன், நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்" (ஆமோஸ்9:15)என்று " Ye'-Ho-VaH' பேசியுள்ளர். நதி தொடங்கி கடல் வரை இஸ்ரயேல் எப்போதும் இருக்கும்.

**ஆரம்ப காலங்களும் இன்றும்**

பூமியைப் படைத்தவர் தான் விரும்பியவர்களுக்கு பூமியைக் கொடுக்க முடியும். நான்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, கடவுள் "எகிப்தின் நதி (அநேகமாக வாடியேல் - அரிஷ்) முதல் பெரிய நதியான யூப்ரடீஸ் நதி வரை" நிலத்தை வாக்குறுதி அளித்தார், ஆனால் "எமோரியரின் அக்கிரமம் இன்னும் நிறைவடையவில்லை." (ஆதியாகமம் 15:16-21)

நான்கு நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பாலஸ்தீனத்திற்கும் எகிப்துக்கும் இடையிலான எல்

- அமர்னா வரைப்பட்டிகை (el-Amarna tablets) அவர்களின் அக்கிரமம் நிறைந்திருந்ததைக் குறிக்கின்றன."சிரியாவும் பாலஸ்தீனமும் உள்ளுக்குள் சூழ்ச்சியால் கொதித்துக்கொண்டிருந்தன என்பதும், வெளியிலிருந்து தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தன என்பது தெளிவாகிறது."



(ஜாக் ஃபினேகள், "பண்டைய கடந்த காலத்திலிருந்து ஒளி, "2வது பதிப்பு, 1959 பக்கம் 109) கிமு 14 ஆம் நூற்றாண்டில், "ஹபிரு" Habiru(எபிரெயர்கள்) நிலத்தை ஆக்கிரமித்தனர்.

தேவன் அறிவித்ததாவது: "என் தூதனானவர் உனக்குமுன்சென்று, எமோரியரும் ....அவர்களை நான் அதம்பண்ணுவேன். நீ அவர்களுடைய தேவர்களைப் பணிந்துகொள்ளாமலும், சேவியாமலும், அவர்கள் செய்கைகளின்படி செய்யாமலும், அவர்களை நிர்மூலபண்ணி, அவர்களுடைய சிலைகளை உடைத்துப்போடுவாயாக.... சிவந்த சமுத்திரம் தொடங்கி பெலிஸ்தரின் சமுத்திரம் வரைக்கும், வனாந்தரம் தொடங்கி நதிவரைக்கும் உன் எல்லையாயிருக்கும்படி செய்வேன், நான் அந்தத் தேசத்தின் குடிகளை உங்கள் கையில் ஒப்புக்கொடுப்பேன், நீ அவர்களை உன் முன்னின்று துரத்திவிடுவாய். அவர்களோடும் அவர்கள் தேவர்களோடும் நீ உடன்படிக்கை பண்ணாதிருப்பாயாக."(யாத்திராகமம்23:20-33)
இருப்பினும், கிபியோனியர்களுடன் உடன்படிக்கை செய்ய இஸ்ரயேல் ஏமாற்றப்பட்டது, இருப்பினும், பல நூற்றாண்டுகளாக, அவர்கள் அந்த உடன்படிக்கையைக் கடைப்பிடித்து வருகின்றனர். (யோசுவா 9)

1948 ஆம் ஆண்டு இஸ்ரயேல் சுதந்திரம் அறிவித்த போது,இஸ்ரயேல் நாட்டில் வாழ்ந்த அரேபியர்களிடம்,ஜோர்டான் கூறியது - அனைத்து யூதர்களையும் கடலுக்குள் விரட்டும் வரை பின்வாங்கச் சொன்னது. பின்வாங்கிய அரேபியர்கள் பின்னர் தங்கள் நிலங்களுக்குத் திரும்பிச் சென்று யூதர்களின் நிலங்களையும் கைப்பற்றுவார்கள். இஸ்ரயேல், அந்த நாட்டில் தங்கியிருந்த அரேபியர்களிடம், தங்கள் நிலங்களை வைத்துக் கொள்ளும்படி சொன்னது. ஆனால் வெளியேறிய அரேபியர்கள் தங்கள் நிலங்களை இழப்பார்கள் என்றது. இஸ்ரயேல் தனது வாக்குறுதியை நிறைவேற்றியது, ஜோர்டானால் முடியவில்லை.

1933 ஆம் ஆண்டு ஹிட்லர் ஜெர்மனியில் ஆட்சிக்கு வந்தபோது, யூதர்களை வெளியேறுமாறு அழுத்தம் கொடுத்தார். (ஒரு இஸ்ரயேலியர் இந்த எழுத்தாளரிடம், தனது மனைவி அரசியல் ரீதியாக தீவிரமாக இருந்ததால், ஒரு போலீஸ்கார் தனது தந்தையை ரகசியமாக எச்சரித்ததாக கூறினார்.அவர்கள் தங்களால் முடிந்ததைப் பிடித்துக்கொண்டு இறுதியில் பாலஸ்தீனத்தில் முடிந்தது. ) எருசலேமின் கிராண்ட் முப்தி (Grand Mufti )யூதர்களின் குடியேற்றத்திற்கு அஞ்சி, "இறுதி தீர்வை" ஆரம்பிக்க ஹிட்லரை வற்புறுத்தினார்.

ஒரு பார்வையாளர் ஆச்சரியப்படுகிறார் : இன வெறுப்பை யார் கடைப்பிடிக்கிறார்கள் ? யார் பாதுகாப்பானவர் ?(Tel Aviv)டெல் அவிவ்வைச் சுற்றி நடக்கும் அரபியனா அல்லது (Ramallah)ரமல்லாவைச் சுற்றி ("அல்லாஹ் வின் உயரங்கள்") நடக்கும் யூதனா ? அரபு முஸ்லிம்களும் கிறிஸ்தவர்களும் இஸ்ரேலிய நகரங்களின் தெருக்களில் சுதந்திரமாக நடக்கிறார்கள்.யூதர்களும் அரேபியர்களும்

வணிகங்களிலும் மருத்துவமனைகளிலும் ஒன்றாக வேலை செய்கிறார்கள். இஸ்ரயேலை வெறுக்கும் அரபு முஸ்லிம்களைக் கூட கவனித்துக்கொள்வதில் ஹடாஸா (Hadassah)மருத்துவமனை நன்கு அறியப்பட்டாதாகும்.

இன்றும், இஸ்ரயேல் கிபியோனுடன் செய்த உடன்படிக்கையைக் கடைப்பிடித்து வருவதாகத் தெரிகிறது.

## ஆசீர்வதிக்கப்பட்டவராகவோ அல்லது சபிக்கப்பட்டவராகவோ இருங்கள்

"கர்த்தர் ஆபிர(கா)மை ...நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன், நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன், பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்."(ஆதியாகமம் 12:1-3) ஈசாக்கு மற்றும் யாக்கோபு வழியாக ஆசீர்வாதம் தொடர்ந்து, இறுதியில் இயேசுவின் வழியாக அவர்களுடைய சந்ததியினருக்கும் கிடைக்கும்.

மக்கள் யூதர்களை ஆசீர்வதித்தபோது, அவர்களுக்கு நல்ல விஷயங்கள் நடந்தன. 1917 ஆம் ஆண்டில், பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு தாயகம் நிறுவப்படுவதை ஆதரித்து கிரேட் பிரிட்டன் பால்ஃபோர் பிரகடனத்தை வெளியிட்டது. அடுத்த ஆண்டு, கிரேட் பிரிட்டன் முதலாம் உலகப் போரில் வெற்றி பெற்ற பக்கத்தில் இருந்தது. 1930களில், ஹிட்லரின் ஜெர்மனி யூதர்களை சபித்தது, 1945 இல், ஜெர்மனி இரண்டாம் உலகப் போரில் தோற்றது.

## கிபியோனைப் போலவா அல்லது அமலேக்கைப் போலவா?

சமீபகாலமாக, நாடுகளும் அமைப்புகளும் இஸ்ரயேலை ஆசீர்வதிப்பதா, இஸ்ரயேலை சபிப்பதா, அல்லது இஸ்ரயேலை தூரத்தில் வைத்திருப்பதா என்பதைத் தேர்ந்தெடுத்து வருகின்றன.

ஹமாஸ் இணை நிறுவனர் ஒருவரின் மகன் தன்னைத்தானே கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றிக்கொண்டார். ஒரு இஸ்லாமிய அரசைக் கட்டியெழுப்ப ஹமாஸ் ஒரு முழு இனத்தையும் (யூதர்கள் )அழிக்க விரும்புகிறது என்று அவர் கூறுகிறார். 2023 ஆம் ஆண்டு காசா பகுதியல் இருந்து இஸ்ரயேல் மீதான ஹமாஸ் தாக்குதல் அக்டோபர் 7 ஆம் தேதி விளாடிமிர் புடினின் (Vladimir Putin's) பிறந்த நாளில் நடந்தது. {("ஹமாஸின் குமாரன்") www.youtube.com/watch?v=pjOEJumoABg} "ஹமாஸுடன் சமாதானத்திற்கு வாய்ப்பில்லை. ஹமாஸை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். அவ்வளவுதான். வேறு மாற்று வழி இல்லை" என்று "ஹமாஸின் மகன்" கூறுகிறார்.

இன்று நாடுகள் இஸ்ரயேலுக்கு கருணை காட்டுவதா அல்லது அதை அழிக்கும் முயற்சியில் சேருவதா என்பதைத் தேர்வு செய்கின்றன. ஆர்வமுள்ளவர்களில் ஈரான், ரஷியா, ஆர்மீனியா மற்றும் (காகசியன்) ஜார்ஜியா, அத்துடன் ஆப்பிரிக்க நாடுகள், ஜெர்மானிய மற்றும் ஸ்லாவிக் நாடுகள் மற்றும் துருக்கிய நாடுகள் அடங்கும்.அரேபிய நாடுகள், மேற்கு ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற பிற நாடுகளும் இதில் ஆர்வமாக உள்ளன.

மீட்டெடுக்கப்பட்ட இஸ்ரயேல் தேசத்தை நோக்கி மிகவும் நுட்பமான ஆக்கிரமிப்பு வடிவத்தில், புலம்பெயர்ந்த அரேபியர்களுக்கும் இஸ்ரயேலின் வாக்குறுதியளிக்கப்பட்ட சந்ததியினருக்கும் இடையில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான ஒரு மாநில தீர்வு வழங்கப்படுகிறது.இஸ்ரயேலின் தலைமை இந்த அரசியல் "ட்ரோஜன் குதிரையின்" (trojan horse)பிடியில் விழுந்தால், அவர்கள் இராஜா சவுலின் கீழ்ப்படியாமையின் அடிச் சுவடுகளைப் பின்பற்றுவார்கள். நம்முடைய பார்வையில் கடவுள் இது நடக்க அனுமதிக்க மாட்டார். நாம் பார்த்துக் கொண்டிருக்கலாம்.

# இஸ்ரயேலின் எல்லைகளில் விரிவாக்கம்
# சமீபத்திய நிகழ்வுகள்



— Matt Kerry

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்னும் பெரிய நதிமட்டுமுள்ளதும்..." (ஆதியாகமம் 15:18)

ஐபிராத்து நதி இஸ்ரயேலுக்கு வடக்கே சுமார் 350 மைல்கள் முதல் கிழக்கே சுமார் 930 மைல்கள் வரை 1,740 மைல் நீளமுள்ள தென்கிழக்கு வளைவில் நீண்டுள்ளது. இது துருக்கியில் உருவாகி பாரசீக வளைகுடாவில் கலக்கிறது.

ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டட தேசத்தின் எல்லை, "எகிப்தின் நதியிலிருந்து பெரிய நதியான ஐபிராத் நதி வரை" என்பது கருத்தில் கொள்ளத்தக்கது, ஏனெனில் அது வேதத்தில் சற்று தெளிவற்றதாகத் தெரிகிறது - மேலும், அது எங்கு வைக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து, கடவுள் ஆபிரகாமுக்கு வாக்குறுதியளித்த தேசத்தின் அளவை வியத்தகு முறையில் மாற்றுகிறது. இந்த வாக்களிக்கப்பட்ட எல்லையின் கோட்டை நாம் வடகிழக்கில் வைத்தாலும் சரி அல்லது ஐபிராத் நதிக்கு கிழக்கே வைத்தாலும் சரி, இஸ்ரயேலின் இன்றைய எல்லைகளை கணிசமாக விரிவுபடுத்துவதாக கடவுள் வாக்குறுதி அளித்தார் என்பது தெளிவாகிறது.

## தற்போதைய நிகழ்வுகள்

மார்ச் 2025 நிலவரப்படி, மத்திய கிழக்கு நாடுகளில் உலகம் ஒரு இணையற்ற புவிசார் அரசியல் மாற்றத்தைக் கண்டுள்ளது. இஸ்ரயேல் அதன் அண்டை நாடுகளிடையே பலம் பெற்று வருகிறது, அதை எதிர்க்கும் எந்த நாடும் வீழ்ச்சியடைந்து வருகிறது. இஸ்ரயேலின் வடக்கு மற்றும் மேற்கு எல்லைகளில் சமீபத்தில் நடந்த தாக்குதல்களுக்குப் பிறகு, இந்த சிறிய நாடு காசா மற்றும் லெபனானில் உள்ள அதன் உள்ளூர் எதிரிகள் மற்றும் சிரியா, ஈரான் மற்றும் ஏமன் நாடுகளில் உள்ள அவர்களின் தொலைதூர தேசிய அரசு ஆதரவாளர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுத்துள்ளது. இஸ்ரயேலின் இராணுவ நடவடிக்கைகளின் அதிர்ச்சியூட்டும் வெற்றியும் வேகமும், கடவுள் என்ன தயார் செய்கிறார் என்பதைக் காண வேதங்களை ஆராய நம்மைத் தூண்டுகிறது. இந்த புவிசார் அரசியல் மாற்றங்கள் மூலம் இஸ்ரயேலின் எல்லைகளை விரிவுபடுத்த கடவுள் திட்டமிட்டு செயல்படுகிறாரா? நாங்கள் அப்படித்தான் நினைக்கிறோம்.

"உன் மதில்களை எடுப்பிக்கும் நாள் வருகிறது, அந்நாளிலே பிரமாணம் வெகுதூரம் பரவிப்போம்."(மீகா 7:11) என்று ஆபிரகாமின் சந்ததியினருக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தைப் பற்றி மீகா தீர்க்கதரிசி விவரிக்கிறார். ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதியுடனும், வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தின் பரப்பளவு பற்றிய இந்த குறிப்புடனும், வடக்கு மற்றும் கிழக்கு நோக்கி இஸ்ரயேலின் எல்லைகளின் விரிவாக்கம் தொடர்பான பிற தீர்க்கதரிசனங்களை ஆராய்வோம்.

## வடக்கிற்கு

"நான் அவர்களை எகிப்து தேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு, அவர்களைக் கீலேயாத்தேசத்துக்கும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவேன், அவர்களுக்கு இடம் போதாமற்போகும்."(சகரியா 10:10)இங்கு இரண்டு



பகுதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன, வடக்கே லெபனான் மற்றும் கிழக்கே கீலேயாத், கீலேயாத் இன்றைய ஜோர்டானில் இருந்தாலும், வரலாற்று ரீதியாக, கீலேயாத் தீர்க்கதரிசி கிதியோன் மீதியானியர்களுடன் போரிட்ட இடமாகும். இது தீர்க்கதரிசி எலியா மற்றும் அம்மோனியர்களுடன் போரிட்டு தோற்கடித்த கீலேயாத்தின் (அந்தத் தேசத்தின் பெயரிடப்பட்டவர்) மகனான நியாயாதிபதி யெப்தா ஆகியோரின் பிறப்பிடமாகவும் இருந்தது.

இஸ்ரயேலுக்கு வடக்கே உள்ள நாடான லெபனான், பழைய ஏற்பாட்டில் பல முறை குறிப்பிடப்பட்டுள்ளது, குறிப்பாக இஸ்ரயேல் தேசத்தின் எல்லைகளைப் பொறுத்தவரை.

தீர்க்கதரிசியின் கட்டளையைக் கவனியுங்கள்.வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குள் நுழையும்போது, இஸ்ரேயேல் எடுக்க வேண்டிய நிலத்தின் பரப்பளவை குறித்து தீர்க்கதரிசியாகிய மோசேயுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையைக் கவனியுங்கள். "நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லிபனோனுக்கும், ஐப்பிராத் நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள்." (உபாகமம் 1:7)

. நீங்கள் திரும்பிப் பிரயாணம் புறப்பட்டு, எமோரியரின் மலைநாட்டிற்கும், அதற்கு அடுத்த எல்லா சமனான வெளிகளிலும் குன்றுகளிலும் பள்ளத்தாக்குகளிலும், தென்திசையிலும் கடலோரத்திலும் இருக்கிற கானானியரின் தேசத்துக்கும், லீபனோனுக்கும், ஐப்பிராத் நதி என்னும் பெரிய நதிவரைக்கும் போங்கள். மீண்டுமாக, "பெரிய நதி ஐபிராத்" இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்தின் எல்லையாகக் குறிப்பிடப்படுவதைக் காண்கிறோம். இருப்பினும், இந்த எல்லை லெபனானில் இருந்து ஐபிராத் வரை வடக்கே தொடர்கிறது. என்பதற்கான கூடுதல் விவரங்களை இந்த வேதம் வழங்குகிறது. எனவே, இஸ்ரயேல் தேசத்தின் வாக்களிக்கப்பட்ட எல்லை, இன்றைய இஸ்ரயேலின் வடக்கிலிருந்து நீண்டு செல்லும் ஒரு கோட்டில் ஐப்பிராத் வரை விரிவடைகிறது.

## கிழக்கு மற்றும் வடக்கு நோக்கி

"கர்மேலின் நடுவிலே தனித்து வனவாசமாயிருக்கிற உமது சுதந்தரமான மந்தையாகிய உம்முடைய ஜனத்தை உமது கோலினால் மேய்த்தருளும், பூர்வநாட்களில் மேய்ந்தது போலவே அவர்கள் பாசானிலும் கீலேயாத்திலும் மேய்வார்களாக" (மீகா7:14 ) கிலேயாத்தைத் தவிர, இப்போது இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தில் பாசானையும் சேர்க்கலாம். பாசான் கீலேயாத்தின் வடக்கேயும், கலிலேயா கடலுக்கு நேர் கிழக்கேயும் உள்ளது. மோசேயுடன் போரிட ஓக் மன்னன் இறங்கி வந்து தோற்ற நிலம் - பாசான், மேலும் வேதவாக்கியங்கள் "பாசானின் காளைகள்" என்று குறிப்பிடுகின்றன, அதாவது பாசானில் சிறந்த காளைகள் வளர்க்கப்பட்டன. பாசானும் கீலேயாத்தும் வாக்களிக்கப்பட்ட தேசத்தின் ஒரு பகுதியாக இருக்கும் என்று எரேமியா தீர்க்கதரிசி

குறிப்பிடுகிறார். "இஸ்ரயேலை அதின் வாசஸ்தலத்துக்குத் திரும்பிவரப்பண்ணுவேன், அப்பொழுது அது கர்மேலிலும் பாசானிலும் மேயும், எப்பிராயீமின் மலைகளிலும் கீலேயாத்திலும் அதின் ஆத்துமா திருப்தியாகும்." (எரேமியா50:19 )தீர்க்கதரிசி மீகா ஒரு சுவாரஸ்யமான விவரத்தைச் சேர்க்கிறார். "அந்நாளிலே அசீரியா முதல் எகிப்தின் பட்டணங்கள் வரைக்கும், எகிப்து முதல் நதிவரைக்கும், ஒரு சமுத்திர முதல் மறு சமுத்தரம் வரைக்கும், ஒரு பர்வத முதல் மறு பர்வதம் வரைக்குமுள்ள ஜனங்கள் உன்னிடத்திற்கு வருவார்கள். " (மீகா 7:12) இரட்டிப்பான முக்கியத்துவத்தைக் கவனியுங்கள்.



அசீரியாவிலிருந்து எகிப்து வரை, எகிப்திலிருந்து நதி வரை (ஐபிராத் ) அதே எல்லைகளை விவரிக்கிறது. எரேமியாவின் தீர்க்கதரிசன எழுத்தின் மூலம், இஸ்ரயேலின் எல்லை எகிப்திலிருந்து அசீரியாவில் உள்ள ஐபிராத் நதி வரை செல்லும் என்பதை கடவுள் வலியுறுத்துகிறார்.

### கிழக்கு மற்றும் மேற்கு நோக்கி

"அந்நாளிலே யூதாவின் தலைவரை விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன், அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள், எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்." (சகரியா 12:6)இந்த வசனம் ஆறு நாள் போரில் இஸ்ரயேலின் வெற்றியின் வேகத்தை விவரிக்கலாம், குறிப்பாக அந்தப் போர் எருசலேமை இஸ்ரயேலிய பிரதேசத்தின் கீழ் இணைத்ததிலிருந்து. ஆனால் இந்த தீர்க்கதரிசனம் காசா, லெபனான் மற்றும் சிரியாவில் சமீபத்திய வெற்றியின் வேகத்தையும் விவரிக்க முடியுமா?

காசா பகுதி, மோவாப் மற்றும் ஏதோம், ஆகியவை இஸ்ரயேலின் இடதுபுறத்திலும், கீலேயாத், அம்மோன் (இன்றைய அம்மான்) மோவாப், ஏதோம் மற்றும் பாசான் ஆகியவை இஸ்ரயேலின் வலதுபுறத்திலும், நவீன கால ஜோர்டானின் ஒரு பகுதியாகவும் உள்ளன. (வலது மற்றும் இடது, பொதுவாக கிழக்கு நோக்கிப் பார்ப்பதிலிருந்து வரையறுக்கப்படுகின்றன)

இஸ்ரயேலர் தங்கள் தேசத்திற்குத் திரும்புவது உறுதி என்பதை குறித்து ஆமோஸ் தீர்க்கதரிசி நன்கு அறியப்பட்ட தீர்க்கதரிசனத்தை வழங்குகிறார். "அவர்களை அவர்கள் தேசத்திலே நாட்டுவேன், நான் அவர்களுக்குக் கொடுத்த தேசத்திலிருந்து அவர்கள் இனிப் பிடுங்கப்படுவதில்லையென்று உன் தேவனாகிய கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆமோஸ்9:15)

ஆமோஸ் அதிகாரம் ஒன்றில், இஸ்ரயேலைச் சுற்றியுள்ள தேசங்களின் பல்வேறு மீறுதல்களுக்கானத் தண்டனைகளை கடவுள் அறிவிக்கிறார். தமஸ்கு, சிரியா, காசா, ஏதோம் மற்றும் மோவாப். தண்டனைகளின் பட்டியல் ஆமோஸ் இரண்டாம் அதிகாரத்தில் தொடர்கிறது, அங்கு மோவாபின் மீது விழுங்கும் நெருப்பை அனுப்புவதாக அவர் உறுதியளிக்கிறார். (ஆமோஸ்2:1-2)

பின்னர் ஆமோஸ் நான்காம் அதிகாரத்தில், கடவுள் பாசான் தேசத்தையும் சேர்த்துக் கொள்கிறார். "சமாரியாவின் மலைகளிலுள்ள பாசானின் மாடுகளே,

நீங்கள் இந்த வார்த்தைகளைக் கேளுங்கள், தரித்திரரை ஒடுக்கி, எளியவர்களை நொறுக்கி, அவர்களுடைய எஜமான்களை நோக்கி - நாங்கள் குடிக்கும்படிக் கொண்டுவாருங்கள் என்று சொல்லுகிறீர்கள். இதோ, கர்த்தராகிய ஆண்டவர் உங்களைத் துறடுகளாலும் உங்கள் பின் சந்ததியை மீன்பிடிக்கிற தூண்டில்களாலும் இழுத்துக்கொண்டுபோகும் நாட்கள் வருமென்று அவர் தம்முடைய பரிசுத்தத்தைக் கொண்டு ஆணையிட்டார்." (ஆமோஸ்4:1-2) இஸ்ரயேலைச் சுற்றியுள்ள தேசங்களுக்கு எதிராக கடவுளின் நியாயத்தீர்ப்புகள் சுமத்தப்படும். இன்றைய தமஸ்குவின் வீழ்ச்சியை ஏசாயா தீர்க்கதரிசி துல்லியமாக முன்னறிவித்தார். "தமஸ்குவின் பாரம். இதோ, தமஸ்குவானது நகரமாயிராமல் தள்ளப்பட்டு, பாழான மண்மேடாகும்." (ஏசாயா 17:1)

தற்போதைய நிகழ்வுகளின் வெளிச்சத்தில் இந்த தீர்க்கதரிசனங்கள் பரிசீலிக்கப்பட வேண்டும். காசாவில் நடக்கும் போர் எங்களுக்கு மிகுந்த துக்கத்தைத் தருகிறது.

மிகவும் கொடூரமாக கொல்லப்பட்ட ஆயிரத்து இருநூறு இஸ்ரேலிய குடிமக்களின் வாழ்க்கைக்காகவும், இருநூறுக்கும் மேற்பட்ட சிறைபிடிக்கப்பட்டவர்களுக்காக நாங்கள் துக்கப்படுகிறோம். காசாவில் ஆயிரக்கணக்கான போராளிகள் அல்லாதவர்களின் இழப்பிற்கும் நாங்கள் இரங்கல் தெரிவிக்கிறோம், அவர்கள் ஹமாஸ் மனிதக் கேடயங்களாக தங்கள் உயிர்களை தந்திரோபாயமாகப் பயன்படுத்தியதால் கொல்லப்பட்டனர், தொலைந்தும் போனார்கள்.

இஸ்ரயேல் அப்பாவி மக்களைக் கொல்லும் அபாயத்தைக் கொண்டிருக்காது என்ற நம்பிக்கையில் ஹமாஸ் தங்கள் மக்களின் உயிருடன் சூதாடியது.

லெபனானுடனான இஸ்ரயேலின் வடக்கு எல்லையைப் பொறுத்தவரை, இஸ்ரேலின் வடக்கு சமூகங்களுக்கு எதிரான ஹெஸ்பொல்லாவின் சமீபத்திய ஏவுகணைத் தாக்குதல்கள் 60,000 இஸ்ரயேலிய குடிமக்களை இடம்பெயரச் செய்தன. 1இஸ்ரயேலின் இராணுவ நடவடிக்கை இப்போது பெய்ரூட் வரை வடக்கே ஹெஸ்பொல்லாவை கிட்டத்தட்ட அகற்றிவிட்டது.

இதுவரையிலான மொத்த விளைவு என்ன ?இஸ்ரயேலிய இராணுவம் இப்போது லெபனான் பிரதேசத்தின் தெற்கு அறுபத்தைந்து மைல்களைக் கட்டுப்படுத்துகிறது, இது நாட்டின் கிட்டத்தட்ட பாதியாகும்.

சிரியாவில் நடந்த சமீபத்திய நிகழ்வுகள், கிளர்ச்சியாளர் படைகள் ஜனாதிபதி அல் - அசாத்தின் al-Assad's ஆட்சியைக் கவிழ்த்தது, இது எசேக்கியேலின் தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்திற்கு ஒரு முன்னோடியாக இருக்கலாம். எசேக்கியேல், வடக்கிலிருந்து இஸ்ரயேல் மீது தாக்குதலைத் தொடங்கும் கோகு, இது பெரும்பாலும் நவீன கால ரஷ்யா என்று விளக்கப்படுவதைப் பற்றிப் பேசுகிறார். ஈரானுடனான ரஷ்யாவின் உறவுகளை வலுப்படுத்துவது, அத்தகைய தாக்குதலுக்கான அரசியல் நோக்கத்தைக் குறிக்கிறது. எதிர்காலத்தில் இஸ்ரயேலுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதன் மூலம், ரஷ்யா தனது பிராந்திய கூட்டணிகளை வலுப்படுத்த முடியும், அதே நேரத்தில் மத்திய கிழக்கில் அதன் முக்கிய கூட்டாளியை பலவீனப்படுத்துவதன் மூலம் அமெரிக்காவிற்கு எதிராக வன்மையான ஒரு



அடியை ஏற்படுத்த முடியும்.

### எசேக்கியேல் 47ன் படி வடக்கு எல்லை

இஸ்ரயேல் தேசத்திற்கு கடவுள் வாக்குறுதி அளித்த தேசத்தின் வடக்கு எல்லைக்கான மற்றொரு திறவுகோலை எசேக்கியேல் கொடுக்கிறார்:"தேசத்தின் எல்லையாவது - வடபுறம் பெரிய சமுத்திரந்துவக்கி, சேதாதுக்குப் போகிற எத்லோன் வழியாயிருக்கிற, ஆமாத்தும் பேரொத்தாவும், தமஸ்குவின் எல்லைக்கும் ஆமாத்தின் எல்லைக்கும் நடுவான சிப்ராயிமும், ஆப்ரானின் எல்லையோடே சேர்ந்த ஆத்சார் அத்தீகோனுமானது. அப்படியே சமுத்திரத்திலிருந்து போகிற எல்லை ஆத்சார் ஏனானும், தமஸ்குவின் எல்லையும், வடமூலையான வடக்கும் ஆமாத்தின் எல்லையுமானது, இதுவடபுறம். "(எசேக்கியேல் 47:15-17)

முக்கியமானது என்னவென்றால், வடக்கு எல்லை பண்டைய ஹமாத்தும் தமஸ்குவும் சந்திக்கும் இடத்தில் அமைந்து பின்னர் மத்தியதரைக் கடல் வரை நீண்டிருக்கும்.

### எசேக்கியேல் 47ன் படி கிழக்கு எல்லை

"கீழ்ப்புறத்தை ஆப்ரானுக்கும் தமஸ்குவுக்கும் நடுவாகவும், கீலேயாத்துக்கும் யோர்தானின் ஓரமான இஸ்ரயேல் தேசத்துக்கும் நடுவாகவும் கீழ்க்கடல் மட்டும் இருக்கும் எல்லையாய் அளப்பீர்களாக, இது கீழ்ப்புறம்."(எசேக்கியேல் 47:18) எண்ணாகமம் 34:3 ல் "கிழக்கே இருக்கிற உப்புக் கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென் எல்லையாயிருக்கும்" என்று நாம் வாசிக்கிறோம், இது உப்புக் கடலின் கிழக்குப் பகுதியும் ஒரு எல்லை என்று கூறுவதாகத் தெரிகிறது. இருப்பினும், ஒபதியாவில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம் "தென்தேசத்தார் ஏசாவின் மலையையும், சமனான தேசத்தார் பெலிஸ்தரின் தேசத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்கள், அவர்கள் எப்பிராயீமின் நாட்டையும், சமாரியாவின் நாட்டையும் சுதந்தரித்துக்கொள்வார்கள், பென்யமீன் மனுஷர் கீலேயாத்தையும் சுதந்தரித்துக்கொள்வார்கள்." (ஒபதியா 1:19) எனவே, இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்திற்குள் கீலேயாத்துடன் ஏதோமையும் சேர்க்க வேண்டும். மோவாப் கீலேயாத்துக்கும் ஏதோமுக்கும் இடையில் இருப்பதால் அதையும் சேர்க்க வேண்டும்.

### எசேக்கியேல் 47ன் படி தெற்கு எல்லை

"தென்மூலையான தென்புறம் தாமார்துவக்கி, காதேசிலுள்ள சண்டை மூட்டுதலின் தண்ணீர்கள் மட்டாகவும் ஆறுமட்டாகவும், பெரியசமுத்திரமட்டாகவும் இருப்பது, இது தென்மூலையான தென்புறம்."(எசேக்கியேல் 47:19) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள "எகிப்தின் அருவி" வாடியேல் - அரிஷ்" ஆகும், இது தற்போதைய இஸ்ரயேலின் எல்லையிலிருந்து மேற்கே சுமார் முப்பது மைல் தொலைவில் உள்ளது.கடவுள் மோசேயிடம் நேரடியாகப் பேசுகிறார்: "உங்கள் தெற்புறம் சீன் வனாந்தரம் தொடங்கி ஏதோம் தேசத்தின் ஓரமட்டும் இருக்கும், கிழக்கே இருக்கிற உப்புக்கடலின் கடைசி தொடங்கி உங்கள் தென் எல்லையாயிருக்கும்."(எண்ணாகமம் 34:3) வாக்களிக்கப்பட்ட எல்லைக்குள் சீன் வனாந்தரம்



சேர்க்கப்பட்டுள்ளது. மோசே கன்மலையை அடித்ததும் , இஸ்ரயேலர்களுக்காக தண்ணீர் ஊற்றப்பட்டதுமான "மேரிபா-காதேசும்" எல்லைக்குள் அடங்கும். (யாத்திராகமம் 17:7) இதுவும் காதேஷ்பர்னேயாவின் இடமாகும். "உங்கள் எல்லை தெற்கிலிருந்து அக்கராபின் மேடுகளைச் சுற்றி, சீன்வனாந்தரம் வரையில் போய், தெற்கிலே காதேஸ் பர்னேயாவுக்கும், அங்கேயிருந்து ஆத்சார் அதாருக்கும் அங்கேயிருந்து அஸ்மோனாவுக்கும் போய், அஸ்மோனாவிலிருந்து எகிப்தின் நதி வரைக்கும் சுற்றிப்போய்க் கடலில் முடியும்." (எண்ணாகமம் 34:4-5) ஹசரத்தார் மற்றும் அஸ்மோன் எங்கு அமைந்துள்ளன என்பது பற்றிய யூகங்கள் இருந்தாலும், அவை காதேஷ்பர்னியாவின் தெற்கே அல்லது வடமேற்கே அமைந்துள்ளனவா என்பது குறித்து யூகங்கள் இருந்தாலும், காதேஷ்பர்னியா தெற்கு எல்லையாகவோ அல்லது அதற்கு அருகிலோ உள்ளது.

## இடம்பெயர்ந்த ஜனங்கள்

வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தின் புவியியல் விளக்கங்களுடன், கடவுள் ஒரு மக்கள் தொகை விளக்கத்தையும் வழங்கினார், அதாவது இஸ்ரயேல் தேசத்திற்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தில் இடம்பெயர்ந்த மக்களின் பட்டியல் - "கேனியரும்,கெனிசியரும், கத்மோனியரும், ஏத்தியரும், பெரிசியரும், ரெப்பாயீமியரும், எமோரியரும், கானானியரும், கிர்காசியரும், எபூசியரும் என்பவர்கள் இருக்கிறதுமான இந்தத் தேசத்தை உன் சந்ததிக்குக் கொடுத்தேன் என்றார்." (ஆதியாகமம் 15:19-21) வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை உள்ளடக்கிய புவியியல் மற்றும் மக்கள் தொகைப் பகுதிகளை உள்ளடக்கிய புள்ளியிடப்பட்ட கோட்டைக் காட்டும் "இஸ்ரயேலின் உரிமை பத்திரங்கள்" என்ற வரைபடச் செருகலைப் பாருங்கள்.

## யோசுவாவுக்கு கடவுள் கொடுத்த கட்டளை

இஸ்ரயேலர்கள் தேசத்தை சொந்தமாக்கிக்கொள்ள யேகோவா தேவன் யோசுவாவை வழிநடத்தும்படி கட்டளையிட்ட தெளிவான விவரங்கள் யோசுவா 13-19 அதிகாரங்களில் உள்ளன.

இந்த புவியியல் விளக்கங்கள் இஸ்ரயேல் - காசா, யூதேயா, சமாரியா, ஜோர்டான், லெபனான் மற்றும் சிரியா வரை விரிவடையும் என்பதை உறுதிப்படுத்துகின்றன. இஸ்ரயேலின் ஒவ்வொரு கோத்திரத்திற்கும் தாம்

வாக்குறுதியளித்த குறிப்பிட்ட பகுதிகளின் விவரங்களை யேகோவா தேவன் யோசுவாவுக்கு வழங்கினார், மேலும் இன்றைய அரசியல் விவாதத்தில் சிலர் பரிந்துரைத்தபடி, இரு நாடுகள் தீர்வுக்கான எந்த ஏற்பாட்டையும் அவர் விட்டுவிடவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆபிரகாமுக்கு யேகோவா தேவன் கொடுத்த வாக்குறுதி -பூமியிலுள்ள எல்லா குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும் என்றாலும், விரிவாக்கப்பட்ட இஸ்ரயேல் தேசம் ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபின் சந்ததியினருக்கு மட்டுமே வாக்குறுதி அளிக்கப்படுகிறது.

இஸ்ரயேல் அதன் தற்போதைய இராணுவ சாதனைகளுடன் இந்த நிலத்தை வலுக்கட்டாயமாகக் கைப்பற்றுமா ?யேகோவா தேவன் புவிசார் அரசியல் நிகழ்வுகளின் கதவைத் திறக்க ஏற்பாடு செய்வாரா ? இன்றைய இஸ்ரயேல் தேசம் இறுதியாக யோசுவாவுக்கு யேகோவா தேவன் கொடுத்த கட்டளையைப் பின்பற்றுமா ? இஸ்ரயேலின் அனுபவங்களில் யேகோவா தேவனின் வல்லமை வெளிப்படுவதை நாம் பார்க்க கர்த்திருப்போம்.

## இன்றும் நாளையும்

சிரியாவில் ஆசாத் ஆட்சியின் சமீபத்திய சரணடைதல், இஸ்ரயேல் மற்றும் அமெரிக்காவும் சிரியாவின் 80% க்கும் மேற்பட்ட இராணுவ ஆயுதங்களை அழிக்க கதவைத் திறந்துள்ளது.வெளியேறும் ஜனாதிபதி அல் -அசாத்துடன் செய்த கொள்ளப்பட்ட "தப்பிக்கும் ஒப்பந்தம்" மூலம் இது சாத்தியமானதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. டிசம்பர் 18 ஆம் தேதி இங்கிலாந்தின் டெய்லி மெயில் (Daily Mail)பத்திரிகையில் வெளியான கட்டுரையின்படி, சிரியாவின் பரந்த இராணுவ ஆயுதக் குவியலின் சரியான ஒருங்கிணைப்புகளுக்கு ஈடாக, ஜனாதிபதி அல் -அசாத் சிரியாவிலிருந்து பாதுகாப்பாக வெளியேற, இஸ்ரயேல் அனுமதித்தது. சிரியாவின் வான் பாதுகாப்பு ஆயுதங்கள் சமீபத்தில் அழிக்கப்பட்டதன் விளைவாக, இஸ்ரயேலின் எரிபொருள் நிரப்பும் விமான டேங்கர்கள் இப்போது சிரியாவின் மீது சுதந்திரமாக பறக்க முடிகிறது. இது இஸ்ரயேலின் தாக்குதல் விமானங்களின் முழு வரிசைக்கும் அத்தியாவசிய ஆதரவை வழங்குகிறது. முரண்பாடாக, இது வடக்கு இஸ்ரயேலில் இருந்து யூப்ரடீஸ் நதி வரை இஸ்ரயேலின் வான் மேன்மையை வழங்கியுள்ளது, மேலும் இப்போது இஸ்ரயேல் சிரியாவின் எந்தப் பகுதியையும்,ஈரானைக்கூடத் தாக்க நேரடி இராணுவ விமானத் திறனை அனுமதிக்கிறது.

இராணுவ ரீதியாக, இஸ்ரயேல் இப்போது அதன் வாக்குறுதியளிக்கப்பட்ட வடக்கு எல்லை வரை நிலத்தை ஆதிக்கம் செலுத்துகிறது !

அடுத்து நாம் என்ன எதிர்பார்க்கலாம் ? இஸ்ரயேல் வடக்கு நிலத்தைக் கைப்பற்றுவதைப் பார்ப்போமா ? ஜோர்டானுடன் ஒரு மோதலைப் பார்ப்போமா ? அல்லது ஜோர்டான் சண்டையின்றி சரணடையுமா ? எதிர்கால நிகழ்வுகளுக்காக நாம் ஆவலுடன் காத்திருக்கும்போது, வாக்குறுதியளிக்கப்பட்ட கடவுளின் இராஜ்யம் பூமியில் ஆட்சி செய்ய நாம் தொடர்ந்து ஜெபிப்போம்.

தேசம் முழுவதும் அமைதி நிலவ நாங்கள் பிரார்த்தனை செய்கிறோம். கடவுளின் வாக்குறுதிகள் நம் கண்முன்னே வெளிப்படுவதைக் கண்டு நாங்கள் உணர்ச்சி வசப்படுகிறோம். மேலும் கடவுள் மனுக்குலம் கற்றுக்கொள்ள, விரும்பும் பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கும், போர் செலுத்த வேண்டிய மரணம் மற்றும் இயலாமையின் விலையை குறித்து நாம் தொடர்ந்து துக்கப்படுகிறோம்.

மறுபுறம்

# சில விருப்பத்தேர்வுகள்

"அந்நாளிலே கர்த்தர் ஆபிராமோடே உடன்படிக்கைபண்ணி, எகிப்தின் நதிதுவக்கி ஐபிராத்து நதி என்றும் பெரிய நதிமட்டுமுள்ளதும்.." (ஆதியாகமம் 15:18)



— David Riceel

### இந்த பாடம் விளக்கத்தை உள்ளடக்கியது

இராஜ்யத்தின் தொடக்கத்தை நோக்கி இஸ்ரயேலுடன் விஷயங்கள் எவ்வாறு முன்னேறுகின்றன என்பதை நாம் காலப்போக்கில் கவனிப்போம். இருப்பினும், எங்கள் கருத்து என்னவென்றால் (1) இஸ்ரயேல் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தை திறம்படக் கொண்டுள்ளது மற்றும் ஒரே ஒரு விதிவிலக்கு, அதாவது யூப்ரடிஸ் நதிக்கு மேல் நோக்கிச் செல்லும் ஒரு குறுகிய பாதையைத் தவிர இஸ்ரயேல் கட்டுப்பாடுப் பெறும் செயல்பாட்டில் உள்ளது, (2)எகிப்து மற்றும் ஜோர்டானுடனான இஸ்ரயேலின் எல்லைகள் தீர்க்கப்பட்டதாகத் தெரிகிறது. (3)இஸ்ரயேலுக்கு எதிரான தீர்க்கதரிசனம் கூறப்பட்ட அரபுப் போர்கள் கடந்த காலத்தில் நடந்தவை. இது தொடர்பான சில வசனங்கள் பின்வருமாறு.

### தென்மேற்கு

எகிப்தைப் பொறுத்தவரை, ஆதியாகமம்15:18 வாடியேல் - அரிஷ்(Wadiel-Arish) இஸ்ரயேலின் தென்மேற்கு எல்லையைக் குறிக்கிறது. இணைக்கப்பட்ட வரைபடத்தில், இந்த வாடி தற்போதைய இஸ்ரயேல் எல்லையைக் கடக்கிறது என்பதைக் கவனியுங்கள். இது, எகிப்துடனான இஸ்ரயேலின் தற்போதைய எல்லை இந்த வேத பகுதியை நிறைவேற்றுகிறது என்பதைக் குறிக்கிறது.

இன்று எகிப்துக்கு இஸ்ரயேலை ஆக்கிரமிக்கவோ அல்லது வெளிப்படையான போரில் ஈடுபடவோ விருப்பமில்லை. அவர்கள் 1948, 1967 மற்றும் 1973 ஆம் ஆண்டுகளில் படையெடுப்புகளைத் திட்டமிட்டனர், அதைத் தொடர்ந்து, 1978 இல், அன்வர் சதாத் (Anwar Sadat) இஸ்ரயேலுடன் ஒரு சமாதான முயற்சியைத் தொடங்கினார்.எகிப்து இஸ்ரயேலுடன் ஒரு முறையான சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது, இதன் மூலம் எகிப்து சினாய் மீதான கட்டுப்பாட்டை மீண்டும் பெற்றது. இதற்கிடையில், ஏசாயா 19:2இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, எகிப்து உள்ள சவால்களைச் சந்தித்துள்ளது, இதனால் எகிப்து இஸ்ரயேலுடன் மேலும் ஆயுதமேந்திய எல்லை மோதல்களில் ஈடுபடுவது சாத்தியமில்லை.

### வடக்கு

கட்டுரையில் காண்கிறபடி, ஆதியாகமம் 15:18 யூப்ரடீஸ் நதியில் வடக்கு எல்லையைக் குறிப்பிடுகிறது.இராஜாக்களாகிய தாவீதும் மற்றும் சாலொமோனும் ஐபிராத் நதிக்கு வடக்கே சென்ற நிலப்பகுதிகளைப் பெற்றனர். இவை உட்புற குறுகிய நிலப்பகுதிகளாக இருந்தன. அவை இஸ்ரயேலின் எந்த குறிப்பிட்ட கோத்திரத்தினருக்கும் சொந்தமானவை அல்ல. அது இஸ்ரயேலிய இராணுவத்தால் கட்டுப்படுத்தப்பட்ட நிலமாக இருந்தது, ஆனால் நமக்குத் தெரிந்தவரை, நாட்டின் மக்கள் தொகை அங்கு அதிகரிக்கவில்லை. இன்றைய நிலை என்ன?

அநேகமாக அது இராஜ்யத்தில் திறக்கப்படலாம். இருப்பினும், ஒருவேளை சிரிய அரசாங்கத்தின் வீழ்ச்சியின் காரணமாக, காலப்போக்கில் சிரியாவின் உட்புறம் வழியாக ஒரு சிறிய வடக்குப் பகுதி இஸ்ரயேலின் கட்டுப்பாட்டில் வரும். சுவாரஸ்யமாக, அப்பகுதியில் உள்ள ட்ரூஸ் (Druz) மக்கள் இப்பகுதியை இஸ்ரயேலின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுள்ளனர்.

### வடமேற்கு




லெபனானில் வடமேற்கைப் பற்றி என்ன செய்வது ? லெபனானில் கடற்கரையோரமாக உள்ள இரண்டு நகரங்களான தீரு அல்லது சீதோன், கடவுளால் இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் என்று எப்போதாவது கூறப்பட்டதாக எந்த வேத பகுதியும் நமக்குத் தெரியாது. தீரு மற்றும் சீதோன் இரண்டும் பெய்ருட்டினுக்கு(Beirut)தெற்கே உள்ளன. ஹெஸ்பொல்லாவை (Hezbollah)அகற்ற இஸ்ரயேல் வடக்கு நோக்கி படையெடுத்துள்ளது மற்றும் லிட்டானி (Litani)ஆற்றின் தெற்கே உள்ள பகுதியில் படைகளைக் கொண்டுள்ளது. ஆனால் இஸ்ரயேல் இதை தங்கள் தேசத்தின் ஒரு பகுதியாகப் பாதுகாப்பதில் எந்த ஆர்வமும் இல்லை. மேலும் இது இஸ்ரயேலுக்கு விதிக்கப்பட்ட நிலம் என்று வேதங்கள் முன்னறிவிக்கவில்லை.

எர்மோன் மலை லெபனான் நாட்டில் உள்ளது. இன்று அதன் சிகரம் சிரியாவிற்கும் லெபனானுக்கு இடையிலான எல்லையைக் கடந்து செல்கிறது. கீழ் சரிவுகள் இஸ்ரயேலில் உள்ளன. "ஏர்மோன் மலையின் தெற்கு சரிவுகள் கோலான் குன்றுகள்(Golan Heights) இஸ்ரயேலிய பகுதி வரை நீண்டுள்ளது."

(விக்கிபீடியா எளிய ஆங்கிலம், "மவுண்ட ஹெர்மோன்") சில மாற்றங்கள் இருக்கலாம், ஆனால் கணிசமான விரிவாக்கத்திற்கு எந்த காரணமும் இருப்பதாகத் தெரியவில்லை.

### கிலேயாத்




கிழக்குப் பகுதியைப் பற்றி என்ன ? இஸ்ரயேல் ஏற்கனவே கோலன் குன்றை இணைத்துக்கொண்டுவிட்டது, மேலும் அமெரிக்கா அதை இஸ்ரயேலுக்குச் சொந்தமானது என்று அங்கீகரித்துள்ளது. யாக்கோபின் நாட்களில் "கிலேயாத்" என்று பூர்வ காலத்தில் அழைக்கப்பட்ட பகுதியும் இதில் அடங்கும். இந்த வார்த்தை ஆதியாகமம் 31 -ல் மூன்று முறை தோன்றுகிறது, அங்கு அது இன்று கோலன் குன்று இருக்கும் நிலத்திற்கு பொருந்தும், இது ஏற்கனவே இஸ்ரயேலின் ஒரு பகுதியாகும்.

சிறிது காலத்திற்குப் பிறகு, மனாசே கோத்திரத்தில் கீலேயாத் என்ற ஒருவர் பிறந்தார் என்றுஎண்ணாகமம் 26:29நமக்குச் சொல்கிறது. "மனோசேயினுடைய குமாரனின் குடும்பங்கள், மாகீரின் சந்ததியான மாகீரியரின் குடும்பமும், மாகீர் பெற்ற கிலேயாதின் சந்ததியான கிலேயாதியரின் குடும்பமும்..." மனாசே தனது கோத்திரத்தில் பாதி (1/2) பங்கை யோர்தானுக்கு கிழக்கே குடியேறியதால், "கிலயாத்" என்ற பெயர் ஆதியாகமம் 31 - ஐ விட தெற்கே யோர்தானுக்கு கிழக்கே நிலப்பகுதிக்கு விரிவுபடுத்தப்பட்டது.

இன்று, "கிலேயாத்" பகுதி ஜோர்டான் நாட்டின் ஒரு பகுதியாகும் . அது ஆபிரகாமுக்கு

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்தின் ஒரு பகுதி அல்ல. மோசே இஸ்ரயேலர்களை யோர்தானைக் கடப்பதற்கு முன்பு அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்றபோது - "அப்பொழுது கர்த்தர் என்னை நோக்கி - நீ மோவாபை வருத்தப்படுத்தாமலும், அவர்களோடே போர் செய்யாமலும் இரு, அவர்கள் தேசத்தில் உனக்கு ஒன்றும் சுதந்தரமாக் கொடேன், ஆர் என்றும் பட்டணத்தின் சீமையை லோத் புத்திரருக்கும் சுதந்தரமாகக் கொடுத்தேன். " (உபாகமம் 2:9) வடக்கே அம்மோனைப் பற்றியும் கடவுள் அதையே கூறினார். (உபாகமம் 2:19)

இருப்பினும், மோசே இஸ்ரயேலரை அந்தப் பகுதிக்கு அழைத்துச் சென்றபோது, எமோரியர்கள் அந்தப் பகுதியில் நிலத்தைக் கைப்பற்றியிருந்தனர். மோசே அவர்களுடன் போர் செய்ய தனக்கு எந்த நோக்கமும் இல்லை என்று அவர்களுக்கு உறுதியளித்தார். வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குள் யோர்தானைக் கடந்து செல்வதற்கு, பாதுகாப்பாக அந்த தேசத்தின் வழியாகப் கடந்து செல்ல மட்டுமே அவர் கேட்டார். ஆனால் எமோரியர் மறுத்துவிட்டனர், சீகோனும் ஓகும் இஸ்ரயேலைத் தாக்கினர். அதன் பிறகு கடவுள் மோசேக்கு வெற்றியைக் கொடுத்து, இஸ்ரயேலர்கள் தேசத்தில் குடியேற அனுமதித்தார், அதை அவர்கள் 2 1/2 கோத்திரங்களான ரூபன், காத் மனாசேயின் பாதிப் பேருடன் செய்தார்கள்.

இங்கே ஆவிக்குரிய அர்த்தம் உள்ளது - சபை - (ரூபன், முதற்பேறானவர்) மற்றும் திரள் கூட்டத்தார் (காத்) ஒரு பரலோக வீட்டைக் கொண்டிருக்கும் ,மேலும் பழைய ஏற்பாடு முற்பிதாக்கள் (மனாசே) வானத்திற்கும் பூமிக்கும் இடையிலான தொடர்புக்கான இணைப்பாக இருப்பார்கள்.

இவ்வாறு மனாசே யோர்தான் நதியின் இரண்டு கரைகளிலும் காலடி எடுத்து வைத்தார். இருப்பினும், எசேக்கியேல் 48 -ல் இஸ்ரயேலின் 12 கோத்திரங்களின் பங்கு இராஜ்யத்திற்காக குறிப்பிடப்படும் போது, லோத்தின் புத்திரருக்குக் கொடுக்கப்பட்ட எந்த நிலமும் இஸ்ரயேலுக்காக சேர்க்கப்படவில்லை. ( ஒருவேளை ஒபதியா *1:19*ல் சில சமயங்களில் திரள் கூட்டத்தாரைக் குறிக்கும் பெஞ்சமின் பற்றிப் பேசுகையில், அங்கேயும் ஒரு ஆவிக்குரிய நிறைவேற்றம் நோக்கமாகக் கொண்டிருக்கலாம்)

ஜோர்டான் 1994 இல் இஸ்ரயேலுடன் ஒரு முறையான அமைதி ஒப்பந்தத்தில் இணைந்தது. ஏப்ரல் 2024 இல், இஸ்ரயேலுக்கு எதிராக ஏவப்பட்ட ஈரானிய ஏவுகணைகளை வீழ்த்துவதில் இஸ்ரயேல், அமெரிக்கா, இங்கிலாந்து மற்றும் பிரான்ஸ் ஆகியவற்றுடன் அவர்கள் ஒத்துழைத்தனர். ஜோர்டானுக்கும் இஸ்ரயேலுக்கும் இடையில் மேலும் போர்கள் ஏற்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை அல்லது அவர்களின் எந்த நிலமும் இஸ்ரயேலுக்கு பறிமுதல் செய்யப்படும் என்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இது லோத்தின் குமாரர்களுக்காகவே உருவாக்கப்பட்டது, அது அப்படியே இருக்கும் என்று தோன்றுகிறது.

## அரபுபோர்கள்

இஸ்ரயேலை ஒழிப்பதற்காக இஸ்ரயேலின் எல்லையில் உள்ள அரபு நாடுகள் தொடங்கும் துடிப்பான போர்களைப் பற்றிய தீர்க்கதரிசனத்தை சங்கீதம் 83 கூறுகிறது. இது 1948 ஆம் ஆண்டிலும், மீண்டும் 1967 ஆம் அண்டிலும், மீண்டும் 1973 ஆம் அண்டிலும் நிறைவேறியது. இஸ்ரயேல் மீது மற்றொரு தேசிய அரபு படையெடுப்பு இல்லாமல் 50 ஆண்டுகளுக்கும் மேலாக நாம் கடந்து விட்டோம். இன்று எந்த அரபு தேசமும் அவ்வாறு செய்ய விருப்பம் தெரிவிக்கவும் இல்லை. கடவுள் இஸ்ரயேலை மூன்று முறை விடுவித்தார், மேலும் அரபு நாடுகள் எதிர்காலத்தில் எந்த தேசிய மோதல்களையும் தவிர்க்க இது போதுமானதாகத் தெரிகிறது. சங்கீதம் *83:9-11*, கடவுள் இஸ்ரயேலை விடுவித்த மூன்று பண்டைய உதாரணங்களைப் பற்றிப் பேசுகிறது என்பதைக் கவனியுங்கள். இது, ஏற்கனவே நிகழ்ந்த மூன்று விடுதலைகள் - 1948, 1967, மற்றும் 1973 - இந்த சங்கீதத்தில் முன்னறிவிக்கப்பட்ட



விரோதங்களை நிறைவேற்ற போதுமானது என்பதைக் குறிக்கிறது.

இந்த மூன்று மோதல்களும் சகரியா 12:7, 6, 8ல் ஒவ்வொன்றாக அடையாளம் காணப்படுவதாகத் தெரிகிறது. பின்னர் ஒரு இறுதி மோதலைப் பற்றி வசனம் 9 பேசுகிறது.இதுஎசேக்கியேல் 38 - ல் விவரிக்கப்பட்டுள்ள ஒன்று, இது வசனம் 10க்கு வழிவகுக்கிறது. அப்போது மேசியா இராஜ்யத்தின் தொடக்கத்தில் இஸ்ரயேலுக்கு முழுவதுமாக வெளிப்படுத்தப்படுகிறார்.

இவ்வாறு, நான்கு படையெடுப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளன - 1948, 1967, 1973,மற்றும் ஒரு எதிர்காலத்தில். இது யோயேல் 1:4, 2:25 உடன் ஒத்துப்போகிறது. இது நான்கு படையெடுப்பு களையும் வகைப்படுத்துகிறது, அவற்றில் கடைசி படையெடுப்பு இராஜ்யத்தை அறிமுகப்படுத்துகிறது (யோயேல் 2:12 20)

எசேக்கியேல் 38 -ல், கோக் (பொதுவாக ரஷ்யா என்று கருதப்படுகிறது)உடன், இஸ்ரயேலுக்கு எதிரான படையெடுப்பில் கூட்டாளிகள் பெர்சியா (ஈரான்), டோகர்மா (துருக்கி), குஷ் (ஏமன்), லிபியா (லிபியா) மற்றும் கோமர் (ஜெர்மனி ) என்பதை கவனியுங்கள். இஸ்ரயேலுக்கு அண்டை நாடான எந்த அரபு நாடுகளும் சேர்க்கப்பட வில்லை.

**சுருக்கம்**

காசா, இஸ்ரயேலுக்கு விதிக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியாக கடவுளால் வெளிப்படையாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (யோசுவா 13:3)சமாரியா மற்றும் யூதேயா என்று சிறப்பாக அழைக்கப்படும் "மேற்குக்குகரை" எப்போதும் இஸ்ரயேலன் வாக்குறுதியளிக்கப்பட்ட நிலத்தின் ஒரு பகுதியாக இருந்தது. கோலன் குன்றுகள் 1973 இல் இஸ்ரயேலால் கைப்பற்றப்பட்டது, 1981 இல் இணைக்கப்பட்டது, மேலும் 2019 இல் அமெரிக்காவால் இஸ்ரயேலின் ஒரு பகுதியாக அங்கீகரிக்கப்பட்டது.

இந்த மூன்று பகுதிகளும் கடவுளால் இஸ்ரயேலுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தின் ஒரு பகுதியாகும்.இஸ்ரயேலின் அனுபவத்தின் ஒரு கட்டத்தில் நாம் இருப்பது போல் தெரிகிறது. இஸ்ரயேல் சூழ்நிலைகளாலும், அதன் குடிமக்கள் சிலர் மீதான நம்பிக்கையாலும், கடவுளின் வாக்குறுதியின்படி, அவர்களுக்குச் சொந்தமான இந்தப் பகுதிகளைக் கட்டுப்படுத்த உந்தப்படுகிறது. ஆதியாகமம் 15:18ல் யூப்ரடீஸ் நதிக்கு வடக்கு நோக்கி ஒரு குறுகிய விரிவாக்கம் சுட்டிக்காட்டப்படுகிறது. அது சிரிய அரசாங்கத்தின் சமீபத்திய வீழ்ச்சியின் விளைவாக இருக்குமா ? அல்லது அது இராஜ்யத்தில் வருமா ? அது நம் கவனத்தை ஈர்த்துள்ளது.

தீர்க்கதரிசனத்தின் பொற்காலம்

# சிதறடிக்கப்பட்ட மீதியானவர்கள் திரும்பி வருதல்



"அக்காலத்திலே, ஆண்டவர் அசீரியாவிலும், எகிப்திலும், பத்ரோசிலும், எத்தியோப்பியாவிலும், பெர்சியாவிலும், சிநேயாரிலும், ஆமாத்திலும், சமுத்திரத் தீவுகளிலும், தம்முடைய ஜனத்தில் மீதியானவர்களை மீட்டுக்கொள்ளத் திரும்ப இரண்டாம் விசை தமது கரத்தை நீட்டி, ஜாதிகளுக்கு ஒரு கொடியை ஏற்றி, இஸ்ரயேலில் துரத்துண்டவர்களைச் சேர்த்து, யூதாவில் சிதறடிக்கப்பட்டவர்களை பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து கூட்டுவார்."(ஏசாயா 11:11-12)

— O. B. Elbert

இரண்டாயிரம் ஆண்டுகால புலம்பெயர்ந்தோரிலிருந்து யூதர்கள் திரும்பி வருவது தொடர்ந்து நடைபெற்று வருகிறது, மேலும் அது வியத்தகு முறையில் அதிகரிக்கும். முடிக்கப்பட்ட தரிசனமும், அதனுடன் தொடர்புடைய நம்பிக்கையும், நம் விசுவாசத்தைப் பலப்படுத்துகின்றது.

நமது ஆதார வசனத்தில் ஏசாயா தீர்க்கதரிசி ஒரு "கொடி" (சமிக்ஞை-signal)உயர்த்தப்படும் என்று குறிப்பிடுகிறார், இதன் விளைவாக இஸ்ரயேல் தேசத்திற்கு பெருமளவில் யூதர்கள் திருப்பி அனுப்பப்படுவார்கள். எதை கொண்டு உருவாக்கப்பட்ட இந்த சமிக்ஞை,யூதர்கள் எரெட்ஸ் Eretzஇஸ்ரயேலுக்குத் திரும்பச் செய்யதது ?இங்கு, திருப்பி அனுப்பப்பட்ட நபர்களின் நம்பிக்கைக்கு ஏற்ப, தொடர்ச்சியாக ஒன்றுடன் ஒன்று நிகழக்கூடிய நான்கு சாத்தியக்கூறுகளை நாங்கள் வழங்குகிறோம்.

முதலாவதாக, மதச்சார்பற்ற மற்றும் வேதாகமம் சார்ந்த சியோனிஸ்டுகள், பல்வேறு அளவிலான நம்பிக்கைகளைக் கொண்டவர்கள், புதிய வாழ்க்கையைத் தொடங்க தங்கள் தாய்நாட்டிற்குத் திரும்புகிறார்கள்.சிலர் கடவுளுக்கான ஆவிக்குரிய ஏக்கத்தினாலோ அல்லது விசுவாசமின்றி, சமாதானத்தைத் தேடியோ நம்பிக்கையுடன் திரும்பி வருவார்கள்.

இது 1878 இல் தொடங்கி உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கின் தீர்க்கதரிசனத்தின் முதல் படியாகத் தொடர்கிறது. (எசேக்கியேல் 37:7-14)



இரண்டாவதாக, கிழக்கு மற்றும் மேற்கத்திய நாடுகளிடையே அதிகரித்து வரும் யூத எதிர்ப்பு, யூதர்களை இஸ்ரயேலின் பாதுகாப்பான புகலிடத்திற்குத் திரும்பத் தள்ளும். இஸ்ரயேலுக்கு யூதர்களின் குடியேற்றத்தின் எண்ணிக்கை அதிகரிப்பதை எருசலேம் போஸ்ட் பின்வருமாறு குறிப்பிட்டது. 2020, 21,000 — 2021,27,000 — 2022, 70,000 — 2023, 60,000

## காசா மற்றும் ஹெஸ்பொல்லா மோதல்கள்

மூன்றாவதாக, "அடையாளம்" என்பது அவர்களின் மேசியாவின் உதயமாக இருக்கலாம், நீண்டகாலமாக வாக்குறுதியளிக்கப்பட்ட இராஜாவாகிய அவரை உண்மையுள்ள இஸ்ரயேலர்கள் விசுவாசத்தால் அடையாளம் காண்கிறார்கள், விசுவாசமற்ற யூதர்களின் குருட்டுத்தன்மை நீக்கப்படும் போது, இறுதியில் பார்ப்பதினால் அவர்கள் அடையாளம் காண்பார்கள். தேசம் செழித்து வளர்வதிலும், இஸ்ரயேலை கோகு, மாகோகு ஆகியோரிடமிருந்து விடுவிப்பதிலும், மரித்தோரின்

உயிர்த்தெழுதலிலும் கூட மேசியாவின் அரசாட்சியின் அற்புதமான வல்லமை நிரூபிக்கப்படும். மேலும் இது யூதர்கள் தங்கள் தாயகத்திற்கு மீண்டும் ஒன்றுகூடுவதற்கு மகத்தான ஊக்கமாக இருக்கும்.

நான்காவதாக, மேசியாவின் இராஜ்யம் வல்லமையிலும் மகிமையிலும் இருப்பது எல்லா தேசங்களுக்கும் தெளிவாகத் தெரியும் போது (செப்பனியா3:8-9) மனந்திரும்பிய முன்னாள் துன்புறுத்தியவர்கள் சிதறடிக்கப்பட்ட யூத மக்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்ப உதவுவதன் மூலம் பரிகாரம் செய்வார்கள்."இதோ, ஜாதிகளுக்கு நேராக என் கரத்தை உயர்த்தி, ஜனங்களுக்கு நேராக என் கொடியை ஏற்றுவேன், அப்பொழுது உன் குமாரரைக் கொடுங்கைகளில் ஏந்திக்கொண்டு வருவார்கள், உன் குமாரத்திகள் தோளின்மேல் எடுத்துக் கொண்டு வரப்படுவார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இராஜாக்கள் உன்னை வளர்க்கும் தந்தைகளும், அவர்களுடைய நாயகிகள் உன் கைத்தாய்களுமாயிருப்பார்கள், தரையிலே முகங்குப்புற விழுந்து உன்னைப் பணிந்து, உன் கால்களின் தூளை நக்குவார்கள், நான் கர்த்தர் எனக்குக் காத்திருக்கிறவர்கள் வெட்கப்படுவதில்லை என்பதை அப்பொழுது அறிந்துகொள்வாய்." (ஏசாயா 49:22-23)

யூதர்கள் தங்கள் விசுவாசத்தின்படி வாக்குப்பண்ணப்பட்ட தேசத்திற்குத் திரும்ப கடவுள் அனுமதிப்பதால், அவருடைய பணி கிருபையாக இருக்கும். யேகோவா தேவன் தம்முடைய ஜனங்கள் ஒவ்வொருவரையும் இஸ்ரயேலுக்குத் திரும்பிக் கொண்டுவந்து, தம்முடன் ஒரு உறவுக்குள் கொண்டுவருவதாக வாக்குறுதி அளிக்கிறார். அவர்களுடைய விசுவாசத்தின்படி, இஸ்ரயேலர் அனைவரும் யேகோவா தேவனே கர்த்தர் என்பதை அறிந்துகொள்வார்கள். "பலத்த கையினாலும், ஓங்கிய புயத்தினாலும், ஊற்றப்பட்ட உக்கிரத்தினாலும், உங்களை ஆளுவேன் என்பதை என் ஜீவனைக் கொண்டு சொல்லுகிறேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார்... உங்களை ஜனசதளங்களின் வனாந்தரத்திலே கொண்டுபோய், அங்கே உங்களோடே முகமுகமாய் வழக்காடுவேன்."(எசேக்கியேல் 20: 33-38)

## அவர்களுக்கு இடம் போதாது

திரும்பி வந்த யூதர்களின் எண்ணிக்கை மிகப் பெரியதாக இருக்கும் என்றும், கிலேயாத் (வடக்கு ஜோர்டான்) மற்றும் லெபனான் ஆகிய இடங்களில் அவர்களுக்கு இடம் கிடைப்பதில்லை என்றும் சகரியா குறிப்பிடுகிறார். "நான் அவர்களை ஜனங்களுக்குள்ளே இறைத்தபின்பு, அவர்கள் தூரதேசங்களிலே என்னை நினைத்து தங்கள் பிள்ளைகளோடுங்கூடப் பிழைத்துத் திரும்புவார்கள். நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு, அவர்களைக் கீலேயாத்தேசத்துக்கும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவேன், அவர்களுக்கு இடம் போதாமற்போகும். இடுக்கமென்கிற சமுத்திரத்தைக் கடக்கையில் அவர் சமுத்திரத்தின் அலைகளை அடிப்பார், அப்பொழுது நதியின் ஆழங்கள் எல்லாம் வறண்டுபோகும், அசீரியாவின் கர்வம் தாழ்த்தப்படும், எகிப்தின் கொடுங்கோல் விலகிப்போகும். நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன், அவர்கள்அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (சகரியா10:9-12)

## சர்வதேச அழுத்தங்கள்

2025 ஆம் ஆண்டு நமது நாளில்இஸ்ரயேல் அரசு நிறுவப்பட்டு 77 ஆண்டுகளுக்குப் பிறகுமற்றொரு இஸ்லாமிய அரசுக்கு ஆதரவாக நிலப்பரப்பைக் குறைக்க சர்வதேச அழுத்தம் அவர்கள் மீது செலுத்தப்படுகிறது. இஸ்ரயேலின் எதிரிகள் அது மறைந்து போக விரும்பினாலும், இஸ்ரயேல் எழுச்சி பெற்று வருகிறது!யேகோவா தேவன் அவர்களின் நில விரிவாக்கத்திலும், அவர்களின் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தில் வலுவான மக்கள் தொகையைப் பெருக்குவதிலும் மும்முரமாக ஈடுபட்டு வருகிறார். "நான் யூதா

வம்சத்தாரைப் பலப்படுத்தி, யோசேப்பு வம்சத்தாரை இரட்சித்து, அவர்களைத் திரும்ப நிலைக்கப்பண்ணுவேன், நான் அவர்களுக்கு இரங்கினேன், அவர்கள் என்னால் ஒருக்காலும் தள்ளிவிடப்படாதவர்களைப் போல் இருப்பார்கள், நான் அவர்களுடைய தேவனாகிய கர்த்தர், நான் அவர்களுக்குச் செவிகொடுப்பேன். எப்பிராயீமர் பராக்கிரமரைப்போல இருப்பார்கள், மதுபானத்தால் களிப்பதுபோல, அவர்களுடைய இருதயம் களிக்கும் அவர்களுடைய பிள்ளைகளும் அதைக் கண்டு மகிழுவார்கள், அவர்கள் இருதயம் கர்த்தருக்குள் களிகூரும். நாம் அவர்களைப் பார்த்துப் பயில்போட்டு அவர்களைக் கூட்டிக்கொள்ளுவேன், அவர்களை மீட்டுக்கொண்டேன், அவர்கள் பெருகியிருந்தது போலவே பெருகிப்போவார்கள்." (சகரியா 10:6-8)



## நேருக்கு நேர்

ஒவ்வொரு சூழ்நிலையிலும், சிதறடிக்கப்பட்ட இஸ்ரயேலர்களிடம் அவர்களுடைய தேசிய மறுசீரமைப்பிற்குத் திரும்புவதற்கான காரணங்களை அவர்களுக்கு வழங்கி, யேகோவா தேவன் "நேருக்கு நேர்" அவர்களிடம் மன்றாடுகிறார். (எசேக்கியேல் 20:35)அதே நேரத்தில், கடவுள் புறஜாதி தேசங்களை "யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு" (யேகோவா தேவன் தீர்ப்பளித்தார் )கொண்டு வருகிறார், அங்கு அவர் அவர்களிடமும் வழக்காடுவார், ஆனால் அது அவர்களின் அழிவுக்காக இருக்கும். "நான் சகல ஜாதியாரையும கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள்என் ஜனத்தையும் இஸ்ரயேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என்தேசத்தைப் பங்கிட்டுக் கொண்டதினிமித்தமும்," (யோயேல்3:2 , எரேமியா30:11)

## விசுவாசத்தின் மோதல்

வேதாகமத்தின் நவீன உலகிற்கு இருந்த தற்போதைய உளதாய் பிரச்சினையை முன்வைக்கிறது.வேதாகமம் கடவுளிடமிருந்து வந்தது என்றால், அதன் வாக்குறுதிகள் நிறைவேற வேண்டும். "அப்படியே என் வாயிலிருந்து புறப்படும் வசனமும் இருக்கும், அது வெறுமையாய் என்னிடத்திற்குத் திரும்பாமல், அது நான் விரும்புகிறதைச் செய்து, நான் அதை அனுப்பின காரியமாகும்படி வாய்க்கும்."(ஏசாயா 55:11)

இஸ்ரயேலின் எதிர்காலப் பங்கு, பூமி முழுவதற்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும் என்று கடவுளுடைய வார்த்தை கூறுகிறது. ஆசீர்வதிக்கும் செயலே இஸ்ரயேலின் முக்கிய பங்கு, மேலும் அது எல்லா ஜனங்களையும் ஆசீர்வதிப்பதற்கான கடவுளின் வழியாக இருக்கும். "யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரயேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்" (ஏசாயா 27:6)

இஸ்ரயேலை தவறாகப் புரிந்து கொண்ட எதிரிகள், பிரபஞ்சத்தின் சிருஷ்டிகருக்கு எதிராக எதிர்கொள்ளும் கடினமான சவாலில் ஈடுபடுகின்றனர். இஸ்ரயேலருக்குக் கடவுள் அளித்த வாக்குறுதிகளைப் பற்றி அறியாமலோ அல்லது அலட்சியமாகவோ, அவர்கள் ஒரு பயனற்ற போரை நடத்துகிறார்கள்.ஹமாஸுடனான தற்காப்புப் போரில் இஸ்ரயேல் இனப்படுகொலை செய்ததாக அவர்கள் குற்றம் சாட்டுவது துரதிர்ஷ்டவசமாக அபத்தமானது. பொது ஜனங்கள் உயிரிழப்புகளைக் குறைப்பதற்கு இஸ்ரயேல் தன்னைத்தானே பொறுப்பேற்கச் செய்கிறது. பயங்கரவாதத் தாக்குதல் நடத்துபவர்கள் குழந்தைகள், பொது ஜனங்கள்

மற்றும் நோயாளிகளை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்துகின்றனர். இஸ்ரயேல் அதன் அரபு குடிகளுடனும், அதன் பிரதேசங்களில் உள்ள பாலஸ்தீனியர்கள் என்று அழைக்கப்படுபவர்களுடனும், சுற்றியுள்ள அரபு நாடுகளுடனும் கூட நிம்மதியாக வாழ விருப்பத்துடன் உள்ளது. இதுவரை பின்பற்றப்படாத இந்த பெருந்தன்மையான அணுகுமுறை மே 14,1948 அன்று இஸ்ரயேலின் சுதந்திரப் பிரகடனத்தில் சாட்சியமளிக்கிறது:

- "பல மாதங்களாக எங்களுக்கு எதிராகத் தொடங்கப்பட்ட தாக்குதலுக்கு மத்தியில், இஸ்ரயேல் நாட்டின் அரபு மக்கள் அமைதியைப் பேணி, முழு மற்றும் சமமான குடியுரிமை மற்றும் அதன் அனைத்து தற்காலிக மற்றும் நிரந்தர நிறுவனங்களிலும் உரிய பிரதிநிதித்துவத்தின் அடிப்படையில் அரசை மேம்படுத்துவதில் பங்கேற்குமாறு நாங்கள் வேண்டுகோள் விடுக்கின்றோம்."

- "அனைத்து அண்டை நாடுகளுக்கும், அவற்றின் மக்களுக்கும் சமாதானம் மற்றும் நல்ல அண்டை நாடுகளை வழங்குவதற்காக நாங்கள் எங்கள் கையை நீட்டி, தங்கள் சொந்த நிலத்தில் குடியேறிய இறையாண்மை கொண்ட யூத மக்களுடன் ஒத்துழைப்பு மற்றும் பரஸ்பர உதவியின் பிணைப்புகளை ஏற்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். முழு மத்திய கிழக்கின் முன்னேற்றத்திற்கான பொதுவான முயற்சியில் இஸ்ரயேல் அரசு தனது பங்கைச் செய்யத் தயாராக உள்ளது."2

### இஸ்ரவேலின் கடவுள்

யேகோவா தேவன் "இஸ்ரயேலின் கடவுள்". அந்த சொற்றொடர் வேதாகமத்தில் 201 முறை வருகிறது. இஸ்ரயேலின் உயர்ந்த பங்கைக் குறைக்கும் எந்த வொரு அணுகுமுறையும், மத ரீதியாகவோ அல்லது தத்துவ ரீதியாகவோ, வேதத்தின் அதிகாரத்தை மறுக்கிறது. "தேவனே



சத்தியபரர் என்றும் எந்த மனுஷனும் பொய்யன் என்றும் சொல்வோமாக."(ரோமர்3:4)இஸ்ரயேல் மலைகளின் உச்சியில் நிறுவப்படும். (ஏசாயா 2:2-4) இஸ்ரயேல் நாடுகள் மத்தியில் உயர்ந்து வருகிறது.

"மாற்று இறையியல்" என்பது கிறிஸ்தவம் யூத மதத்தை இடம் பெயர்த்துவிட்டது என்ற கருத்தாகும். இந்த நம்பிக்கை, கடவுளின் திட்டத்தில் கிறிஸ்தவ திருச்சபை இஸ்ரயேலை மாற்றியமைத்துள்ளது என்றும், இயேசு கிறிஸ்துவின் மூலம் புதிய உடன்படிக்கை, இஸ்ரயேலர்களுடன் செய்யப்பட்ட பழைய உடன்படிக்கையை மீறுகிறது என்றும், அவர்கள் கடவுளின் தயவை என்றென்றும் இழந்துவிட்டதாகக் கூறுகின்றனர். மாற்று இறையியல் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது, ஆனால் சர்ச்சைக்குரியதாகவும் உள்ளது, ஏனெனில் இது பெரும்பாலும் வரலாற்றில் யூத எதிர்ப்பு மனப்பான்மைகள் மற்றும் செயல்களுடன் தொடர்புடையதாக உள்ளது. பல நவீன கிறிஸ்தவர்கள் இந்த யோசனையை நிராகரித்து, அதற்கு பதிலாக இரண்டு விசுவாசங்களுக்கு இடையே மரியாதை மற்றும் உரையாடலை வலியுறுத்துகின்றனர்.

இஸ்ரயேலின் எதிர்கால முக்கியத்துவத்திற்கான கூடுதல் சான்றுகள் ஏசாயாவில் காணப்படுகின்றன- "ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா யூதாவையும் எருசலேமையும குறித்துக் கண்ட தரிசனம், கடைசி நாட்களில்

கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு மேலாய் உயர்த்தப்படும், எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும். அவர் ஜாதிகளுக்குள் நியாந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்து கொள்வார், அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள், ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை. "(ஏசாயா 2:1-5)

அனைத்து நாடுகளும் தங்கள் இரட்சிப்புக்கான ஒரு அடையாளமாக இஸ்ரயேலின் இரட்சிப்பைப் பார்ப்பார்கள். கடவுளின் சட்டம் எருசலேமிலிருந்து வெளிப்படும், இது தீர்க்கதரிசனத்தின் பொற்காலத்தைக் கொண்டுவரும்.போர்கள் நின்றுவிடும், சமாதானம் நிலவும் விருப்பமுள்ள அனைத்து மனுக்குலத்தையும் கடவுள் காப்பாற்றுவார். (ஏசாயா35, வெளிப்படுத்துதல் 22:1-5)

## கடவுளின் திட்டத்திற்கு இஸ்ரயேல் அவசியம்

கடவுளின் திட்டத்தில் இஸ்ரயேல் இன்றியமையாதது என்பதை அப்போஸ்தலன் பவுல் உறுதிப்படுத்துகிறார்."மேலும், சகோதரரே, நீங்கள் உங்களையே புத்திமான்களென்று எண்ணாதபடிக்கு ஒரு இரகசியத்தை நீங்கள் அறியவேண்டுமென்றிருக்கிறேன், அதென்னவெனில், புறஜாதியாருடைய நிறைவு உண்டாகும்வரைக்கும் இஸ்ரயேலரில் ஒரு பங்குக்குக் கடினமான மனதுண்டாயிருக்கும். இந்தப்பிரகாரம் இஸ்ரயேலரெல்லாரும் இரட்சிக்கப்படுவார்கள். மீட்கிறவர் சீயோனிலிருந்து வந்து, அவபக்தியை யாக்கோபைவிட்டு, விலக்குவார் என்றும், நாம் அவர்களுடைய பாவங்களை நீக்கும்போது, இதுவே நான் அவர்களுடனே செய்யும் உடன்படிக்கை என்றும் எழுதியிருக்கிறது. சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள், தெரிந்துகொள்ளுதலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கிறார்கள். "(ரோமர் 11:25-28)

இஸ்ரயேலின் மறுசீரமைப்பு பூமியில் கடவுளுடைய இராஜ்யத்திற்கு முன்னுரையாகும், பூமியிலுள்ள அனைத்து குடும்பங்களையும் ஆசீர்வதிக்கும். (ஆதியாகமம் 22:15-18) கடவுள் இஸ்ரயேலின் பாவங்களை நீக்கி, தம்முடைய நோக்கங்களுக்காக அவற்றை அன்புடன் மீட்டெடுத்தார் என்பதை மனுக்குலம் உணரும் போது, அவர்கள் கடவுளின் மகத்துவத்தை உணர்வார்கள். மேலும்,இஸ்ரயேல் தேசத்திலிருந்து கடவுளின் ஆசீர்வாதங்கள் வருவதை காண்பார்கள். இந்த அருமையான திட்டத்தை முன்கூட்டியே அறிந்து கொள்வதில் நாங்கள் மிகவும் பாக்கியவான்களாக இருக்கிறோம்.

## சமீபத்திய முஸ்லிம் இடம்பெயர்வு

முஸ்லிம்கள் மேற்கத்திய கலாச்சாரத்திற்கு பெருமளவில் இடம்பெயர்வது,நமது சகாப்தத்திற்கு தனித்துவமானது. மருத்துவம், அறிவியல், பொறியியல், சட்டம் மற்றும் நிதி ஆகியவற்றிலிருந்து சிறு வணிக உரிமையாளர்களின் கடின உழைப்பு தொழில் முனைவோர் வரை தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்ளும் ஆற்றலை அவர்கள் கொண்டு வருகிறார்கள். மேற்கத்திய நாடுகள் அவற்றின் பங்களிப்புகளால் வளப்படுத்தப்படலாம். இருப்பினும், மாறுபட்ட அளவுகளில், அவை இஸ்ரயேல் குறித்து எதிர்மறையான கண்ணோட்டங்களையும் கொண்டு வருகின்றன. உதாரணமாக, மேற்கில் உள்ள அவர்களின் புதிய வீடுகளின் ஒப்பீட்டளவில்

பாதுகாப்பான இடத்திற்கு வந்து பிறகும் கூட,நக்பா Nakba(பேரழிவு) அவர்களின் சொற்களஞ்சியத்திலும் கலாச்சாரத்திலும் உள்ளது. இஸ்ரயேல் அரசு உருவாவதை தங்கள் முஸ்லிம் நலன்களுக்கு ஒரு "பேரழிவாக" நக்பா கருதுகிறார்.ஹமாஸ்"க்கு எதிராக இஸ்ரயேல் நடத்திய தற்காப்புப் போராட்டத்தின் போது, அமெரிக்காவின் கல்லூரி வளாகங்களில் வெடித்த யூத எதிர்ப்பு உணர்வைக் கண்டு நாங்கள் அதிர்ச்சியடைந்தோம். இந்த தப்பெண்ணத்தால் வழிநடத்தப்படும் வளர்ந்து வரும் முஸ்லிம் சக்தி, இடதுசாரி சாய்வான மேற்கத்திய அரசியலை இஸ்லாமிய ஆதரவு மற்றும் இஸ்ரயேல் எதிர்ப்பு நிலைப்பாடுகளுக்குத் திருப்புமாக என்பதைப் பார்க்க நாங்கள் காத்திருக்கிறோம்.

## தீர்க்கதரிசனத்தின் பொற்காலம்

தீர்க்கதரிசனத்தின் பொற்காலத்தின்



தொடக்க நாட்களில் இஸ்ரயேலர்கள் தங்கள் வாக்குறுதியளிக்கப்பட்ட தேசத்தில் கூட்டிச் சேர்க்கப்படுவதை, நமதுஆதார வசனத்திற்கு முந்தைய ஏசாயா 11- ஆம் அதிகாரத்தின் முந்தைய வசனங்கள் அடையாளம் காட்டுகின்றன. .

மேசியாவைப் பற்றிய ஏசாயாவின் அறிமுகத்தைக் கவனியுங்கள். "ஈசாயென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும். ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், ஆலோசனையையும் பெலனையும் அருளும் ஆவியும், அறிவையும் கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தையும் அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர் மேல் தங்கியிருப்பார். கர்த்தருக்குப் பயப்படுதல் அவருக்கு உகந்த வாசனையாயிருக்கும், அவர் தமது கண் கண்டபடி நியாந்தீர்க்காமலும், தமது காது கேட்டபடி தீர்ப்புச் செய்யாமலும், நீதியின்படி ஏழைகளை நியாயம் விசாரித்து, யதார்த்தத்தின்படி பூமியிலுள்ள சிறுமையானவர்களுக்குத் தீர்ப்புச் செய்து, பூமியைத் தமது வாக்கின்கோலால் அடித்து, தமது வாயின் சுவாசத்தால் துன்மார்க்கரைச் சங்கரிப்பார். நீதி அவருக்கு அரைக்கட்டு, சத்தியம் அவருக்கு இடைக்கச்சையு மாயிருக்கும்." (ஏசாயா 11:1-5)

இயேசு கிறிஸ்துவும் அவருடைய திருச்சபையும் பூமியை நீதியுடன் ஆட்சி செய்து, மனுக்குலத்தை பாவத்திலிருந்தும் மரணத்திலிருந்தும் விடுவிப்பார்கள். (வெளிப்படுத்துதல் 20:6)

அந்த நாளில்", ஆயிரமாண்டு அரசாட்சியில், ஓநாய் ஆட்டுக்குட்டியுடன் சமாதானமாக வாழும், ஒரு சிறு குழந்தை அவைகளை வழிநடத்தும். "என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்கு செய்வாருமில்லை, கேடுசெய்வாருமில்லை, சமுத்திரம் ஜனத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்." (ஏசாயா 11:9) மேசியா ஜனங்களுக்கு ஒரு அடையாளமாக நிற்பார். அவரைப் பற்றி தேசங்கள் விசாரிப்பார்கள், அவருடைய இளைப்பாறும் இடம் மகிமையுள்ளதாயிருக்கும். கிறிஸ்தவ சகாப்தத்தில் எப்போதாவது ஏசாயாவின் அழகிய தரிசனம் நிறைவேறியதா என்று கற்பனை செய்வது மிகவும் கடினம்.

## வாக்களிக்கப்பட்ட சமாதானம்

இஸ்ரயேலுக்கும் அதன் இஸ்லாமிய அண்டை நாடுகளுக்கும் இடையே தற்போது நிலவும் மோதலுக்கு, அமைதியான முடிவு ஏசாயாவின்

தீர்க்கதரிசனங்களிலும் காணப்படுகிறது. "அக்காலத்திலே எகிப்துசேத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும், ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள், அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்.அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார், எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும் காணிக்கைகளோடும் ஆராதனைசெய்து, கர்த்தருக்குப் பொருத்தனைகளைப்பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள். கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார், அடித்துக் குணமாக்குவார், அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள், அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார்." (ஏசாயா19:19-22)

கடவுள் எல்லா தேசங்களுக்கும் தன்னை வெளிப்படுத்துவார், அதன் விளைவு மிகவும் ஆழமானதாக இருக்கும். அவர்கள் இஸ்ரயேலின் அழிவைத் தேடுவதை நிறுத்திவிடுவார்கள்.

தெய்வீக கருணைக்காக அவர்கள் செய்யும் வேண்டுதல்களைக் கடவுள் கவனித்து கேட்பார் !இதன் விளைவு நீதியின் இராஜ்ஜியம் பூமியில் ஸ்தாபிக்கப்படுவதை துரிதப்படுத்தும்.

மத்திய கிழக்கில் சமாதானம் வரும், இஸ்ரயேலை அழிப்பதன் மூலம் அல்ல, மாறாக யேகோவா தேவனின் வல்லமையின் கீழ் அவர்கள் மேலெழும்புவதன் மூலம் !எகிப்தும் அசீரியாவும் இஸ்ரயேலுடன் கூட்டாளிகளாக இணைந்து,கடவுளின் நிபந்தனைகளின் கீழ் பூமியெங்கும் ஆசீர்வாதங்களைக் கொண்டு வரும்."அக்காலத்திலே எகிப்திலிருந்து அசீரியாவுக்குப் போகிறபெரும்பாதை உண்டாயிருக்கும், அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள். அக்காலத்திலே இஸ்ரயேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும். அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர் - எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியாராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரயேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்." (ஏசாயா 19:23-25)

இஸ்ரயேல் தேசங்கள் மத்தியில் எழுச்சி பெற்று வருகிறது !யேகோவா தேவன் மேலுள்ள ஆழ்ந்த பக்தியுடனும், மிகுந்த ஆவலுடனும், தீர்க்கதரிசனத்தின் மகத்தான நிறைவேற்றத்தை நாங்கள் எதிர்நோக்குகிறோம்.

## வரவிருக்கும் உடன்படிக்கை

# இஸ்ரயேலில் புதிய உடன்படிக்கையை வரிசைப்படுத்துதல்



— Len Griehs

"அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார். " (சகரியா 8:23)

அக்டோபர் 2004 இல், 70 க்கும் மேற்பட்ட ரபீகள் கொண்ட குழு, சன்ஹெட்ரினை மீண்டும் நிறுவ முயன்றது. பண்டைய இஸ்ரயேலின் உயர் நீதிமன்றம் 5 ஆம் நூற்றாண்டில் யூதர்கள் கிறிஸ்தவ துன்புறுத்தலுக்குப் பிறகு கலைக்கப்பட்டது. கெனெசெட் (Knesset)மேல் சபையாகச் செயல்பட்டு இஸ்ரயேலின் உச்ச நீதிமன்றமாக மாறுவதே இந்த நவீன சன்ஹெட்ரினின் குறிக்கோளாகும். அவர்களின் நிகழ்ச்சி நிரலில் மீண்டும் ஆலயம், இஸ்ரயேலுக்கான தார்மீக முடிவுகளை எடுக்க தோராவைப் பயன்படுத்துதல், மேசியாவை அடையாளம் காணுதல், மற்றும் அவரை இஸ்ரயேல் அனைவருக்கும் அறிவிப்பது ஆகியவை அடங்கும். இஸ்ரயேலின் தீவிர மரபுவழி யூதர்களால் (ஹரேடி-theHaredi) பொதுவாக எதிர்க்கப்பட்டது, நான்கு ஆண்டுகால விவாதத்திற்குப் பிறகு, குழுவின் தலைவர் இராஜினாமா செய்தார், இதனால் முயற்சி முடிவுக்கு வந்தது.

### மேசியாவை அறிவித்தல்

இதற்கு நேர்மாறாக, பரிசுத்த தீர்க்கதரிசிகளான சகரியாவும் எரேமியாவும், யேகோவா தேவன் இஸ்ரயேலுக்கு மேசியாவை வெளிப்படுத்துவார் என்று தீர்க்கதரிசனம் உரைத்தனர். இது இஸ்ரயேலர் தங்கள் மேசியா, உண்மையில் இயேசு என்பதை அறியும்போது மிகுந்த வருத்ததிற்கு வழிவகுக்கும் :"நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)



வேதவசனங்களைப் பின்பற்றுவதற்கான இந்த விருப்பம் குறிப்பிடத்தக்கதாக இருந்தாலும், இஸ்ரயேலை வழிநடத்த யேகோவா தேவன் எழுப்பிய ஆளும் குழு - ஒரு பெரிய குழு - உயிர்த்தெழுப்பப்படும் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள். அவர்கள் திருச்சபை கட்டி முடிக்கப்பட்டவுடன் பூமியில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் என்று வாக்குறுதியளிக்கப்பட்ட உண்மையுள்ள ஆண்களும் பெண்களும் ஆவார்கள். (சங்கீதம்45:16, மீகா 5:5) பழைய ஏற்பாட்டின் காலத்தின் இந்த உண்மையுள்ள ஆண்களும் பெண்களும் கடவுளுடைய நீதியுள்ள இராஜ்யத்தின் போது பூமியில் கிறிஸ்துவின் காணக்கூடிய பிரதிநிதிகளாக மாறுவார்கள் என்று தீர்க்கதரிசனம் கூறப்பட்டுள்ளது. அதே நேரத்தில், இயேசுவும் அவருடைய திருச்சபையும் பரலோகத்திலிருந்து ஆட்சி செய்வார்கள்.



கடவுளுடைய இராஜ்யத்தின் தெய்வீக அரசாங்கம் பரலோகத்தில் நிறுவப்படும், அதன் பூமிக்குரிய பிரதிநிதிகள் இஸ்ரயேலில் இருப்பார்கள். இந்த தெய்வீக அரசாங்கம் அனைத்து மதச்சார்பற்ற அரசாங்கங்களையும் ஆளுகைச் செய்யும்.

யேகோவா தேவனின் நீதியுள்ள அரசாங்கம், இஸ்ரயேலுடன் செய்யப்பட்ட கடவுளின் புதிய உடன்படிக்கையின் நிர்வாகக் கிளையாக இருக்கும். "இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது இஸ்ரயேல் குடும்பத்தோடும் யூதா குடும்பத்தோடும் புது உடன்படிக்கை பண்ணுவேன். நான் அவர்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து அழைத்து வரக் கைப்பிடித்த நாளிலே, அவர்களோடே பண்ணின உடன்படிக்கையின்படி அல்ல, ஏனெனில் நான் அவர்களுக்கு நாயகராயிருந்தும், அந்த என் உடன்படிக்கையை அவர்கள் மீறி அவமாக்கிப்போட்டார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார்." (எரேமியா 31:31, 32)

இந்தப் புதிய உடன்படிக்கை பழைய நியாயப்பிரமாண உடன்படிக்கையை மாற்றும், அதன் கீழ் இஸ்ரயேலும் அனைத்து யூதர்களும் கணக்குக் கொடுக்க வேண்டியிருக்கும். "புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப் பழமையாக்கினார், பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக் காலம் சமீபத்திருக்கிறது." (எபிரெயர் 8:13)

இயேசுவின் முதல் வருகையின் போது அவரை மேசியாவாக ஏற்றுக்கொண்ட யூதர்கள் நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கடினங்களிலிருந்து விடுவிக்கப்பட்டனர். புதிய உடன்படிக்கை தொடங்கப்படும் போது, இஸ்ரயேலர் தங்கள் மேசியாவை ஏற்றுக்கொள்வதால் அதிலிருந்தும் விடுவிக்கப்படுவார்கள். பூமியில் நித்திய ஜீவனை கொண்டு வரவேண்டும் என்பதற்காக கொடுக்கப்பட்ட முதல் உடன்படிக்கையால் சாதிக்க முடியாததை, இரண்டாவது உடன்படிக்கையால் சாதிக்கும். நியாயப்பிரமாண உடன்படிக்கை ஆவிக்குரிய வாழ்க்கையை வாக்குறுதி அளிக்காததால், இரண்டாவது உடன்படிக்கையும் வாக்குறுதி அளிக்கப்படவில்லை.

இருப்பினும், புதிய உடன்படிக்கையை கைக் கொள்ளக்கூடியவர்களுக்கு பூமியில் நித்திய ஜீவனை வாக்களிக்கிறது. இறுதியில், எல்லா ஆண்களும் பெண்களும் இயேசுவை அடையாளம் கண்டுகொள்வார்கள். இஸ்ரயேல் கடவுளுடைய இராஜ்யத்தின் மையமாக மாறியிருக்கும் என்பது அனைவருக்கும் தெளிவாகத் தெரியும், மேலும் அவர்களும் புதிய உடன்டிக்கையின் கீழ் தங்களை சேர்த்து கொள்வார்கள். (சகரியா 8:23)

## புதிய உடன்படிக்கைக்கு இஸ்ரயேலை ஆயத்தப்படுத்துதல்

இஸ்ரயேலுடன் ஒரு புதிய உடன்படிக்கையை நிறுவுவது மேசியாவின் யுகத்தின் முதல் வேலையாக இருந்தாலும், ஆரம்ப வேலை 150 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது. 1868 ஆம் ஆண்டு, முந்தைய பிரதமர் லார்டு டெர்பி (Lord Derby)பதவி விலகியபோது, யூதரான பெஞ்சமின் டிஸ்ரேலி, (Benjamin Disraeli)இங்கிலாந்தின் விக்டோரியா மகாராணியால் பிரதமராக நியமிக்கப்பட்டார். டிஸ்ரேலி சில மாதங்களுக்குள் தோல்வியடைந்தார், ஆனால் 1874 இல் அவர் மீண்டும் போட்டியிட்டு முதல் மற்றும் ஒரே தேர்ந்டுெக்கப்பட்ட யூத பிரதமரானார். (அவர் இளமையாக இருந்தபோது,

அவரது தந்தை ஜெப ஆலயத்தில் கோபமடைந்து, தனது மகன்களை ஆங்கிலிகன் சர்ச்சில் ஞானஸ்நானம் பெற்றதைத் தவிர, அவர் அதற்குத் தகுதி பெற்றிருக்க மாட்டார்.)அவரது தேர்தல் யூதர்களுக்கும் பாலஸ்தீன நிலத்திற்கும் ஒரு நம்பமுடியாத திருப்புமுனையாக இருக்கும்.

கிபி 33 இல் இயேசுவை நிராகரித்ததற்காக யூதர்கள் முந்தைய 1845 ஆண்டுகளாக கடவுளின் வெறுப்பை அனுபவித்தனர். "உங்கள் வீடு உங்களுக்கு பாழாக்கிவிடப்படும்."(மத்தேயு 23:38) டிசம்பர் 1917 இல், பிரிட்டிஷ் ஜெனரல் ஆலன்பி(Allenby)துருக்கியர்களிடமிருந்து எருசலேமைக் கைப்பற்றினார், மேலும் எருசலேமைக் கட்டுப்படுத்திய ஒட்டோமான் பேரரசு விரைவில் வீழ்ந்தது.1

1924 முதல் 1945 வரையிலான யூத எதிர்ப்பு இருண்ட காலம், 1948 இல் மறுபிறவி எடுத்த இஸ்ரயேலுக்கு வழிவகுத்தது. .2பாலஸ்தீனம் மீண்டும் பிறந்தபோது 600,000 யூதர்கள் மட்டுமே பாலஸ்தீனத்திற்குத் திரும்பினார், ஆனால் சுதந்திரப் போர் வெடித்ததற்கு பிறகு குடியேற்றம் அதிகரித்தது மற்றும் இஸ்ரயேலின் யூத ஜனங்களில் தொகையில் 12 மடங்கு வளர்ச்சியை உருவாக்கியுள்ளது, இது விரைவில் ஏழு மில்லியனை எட்டும்.

## பாவங்கள் நீக்கப்பட வேண்டும்

அழிக்கப்பட்ட வேறு எந்த தேசமும் மீண்டும் எழுந்ததில்லை. வேதத்தை ஆராயும் மாணவர்களுக்கு, இஸ்ரயேலின் மறுபிறப்பு, நாம் இந்த தற்போதைய தீய உலகத்தின் இறுதி நாட்களில் இருக்கிறோம் என்பதற்கும், கிறிஸ்துவின் ஆயிரமாண்டு இராஜ்யத்தின் விளிம்பில் இருக்கிறோம் என்பதற்கும், "எல்லாம் நிறைவேறித் தீருங்காலங்கள் வருமளவும்" ஒரு வலுவான மற்றும் காணக்கூடிய அடையாளமாகும். (அப்போஸ்தலர் 3:20-21)

இருப்பினும், இஸ்ரயேல் இன்னும் புதிய உடன்படிக்கைக்கு தயாராக இல்லை. முதலில் தேசம் அதன் பாவங்களிலிருந்து சுத்திகரிக்கப்பட வேண்டும். "அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரயேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கையாவது - என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்." (எபிரெயர் 8:10) நியாயப்பிரமாணத்தால் (Torah) "ஒருக்காலும் பூரணப்படுத்தமாட்டாது" என்று பவுல் கூறினார். (எபிரெயர் 10:1) இயேசு மட்டுமே, ஆதாமின் பாவம் இல்லாமல் நியாயபிரமாணத்தின் கீழ் பாவமற்றவராக இருக்க முடிந்தது. மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், "பிரமாணங்களால் இருதயத்தை மாற்ற முடியாது, ஆனால் அவை இதயமற்றவர்களைக் கட்டுப்படுத்த முடியும்" என்று கூறி இந்தக் கருத்தைப் புரிந்துகொண்டார். இயேசுவுக்குத் தூய இருதயம் இருந்தது, ஏனென்றால் அவர் கடவுளை தனிப்பட்ட முறையில் அறிந்திருந்தார். (மத்தேயு5:8 )மேலும் கடவுளின் குமாரன், மனிதனாக இருந்தபோதிலும், ஆதாமின் பாவ நிலையை அவர் சுதந்தரிக்கவில்லை. இயேசுவால் உடன்படிக்கையைக் கடைபிடிக்க முடிந்தது. அந்த 613 சட்டங்களால் இயல்பான போக்குகளை நீக்க முடியவில்லை. ஆரம்பத்திலிருந்தே, நியாயப்பிரமாணம் யூத தேசத்தைக் கிறிஸ்துவிடம் கொண்டுவருவதற்கு ஒரு "உபாத்தியாராக" இருந்தது.(கலாத்தியர் 3:24)புதிய உடன்படிக்கை செயல்படுத்தப்படும்போது, அது இருதயத்தை மாற்றும். "அந்நாட்களுக்குப்பிற்பாடு, நான் இஸ்ரயேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன்படிக்கையாவது, நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். இனி ஒருவன் தன் அயலானையும், ஒருவன் தன் சகோதரனையும் நோக்கி - கர்த்தரை அறிந்துகொள் என்று போதிப்பதில்லை, அவர்களில் சிறியவன்முதல்

பெரியவன்மட்டும், எல்லாரும் என்னை அறிந்துகொள்வார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார், நான் அவர்கள் அக்கிரமத்தை மன்னித்து, அவர்கள் பாவங்களை இனி நினையாதிருப்பேன்." (எரேமியா 31:33, 34) யாக்கோபின் இக்கட்டு காலத்தில், விடுதலையின் போதும், கடவுள் தாம் ஆபிரகாமின் கடவுள் என்பதையும், ஆபிரகாமுக்குக் கொடுக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற இப்போது தயாராக இருப்பதையும் தேசத்திற்கு நிரூபிப்பார்.

லோகோஸ் என்ற முறையில், ஆதாமையும் அவனது சந்ததியினரையும் மீட்க, மனிதனாக இருப்பதற்கு முன் இருந்த இயேசு மனிதனாகப் பிறக்க வேண்டியிருந்தது. (பிலிப்பியர் 2:6-8, 1தீமோத்தேயு2:6)இருப்பினும், இன்னும் அதிகமாகத் தேவைப்பட்டது, அவர் நியாயப்பிரமாணத்தின் சுமையைக் குறைக்க வேண்டியிருந்தது. அதற்கு அவர் ஒரு யூதராகப் பிறக்க வேண்டியிருந்தது. (கலாத்தியர் 4:5) "ஆகையால் முதலாம் உடன்படிக்கையின் காலத்திலே நடந்த அக்கிரமங்களை நிவிர்த்திசெய்யும் பொருட்டு அவர் மரணமடைந்து, அழைக்கப்பட்டவர்கள் வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட நித்திய சுதந்தரத்தை அடைந்துகொள்வதற்காக, புது உடன்படிக்கையின் மத்தியஸ்தராயிருக்கிறார்." (எபிரெயர் 9:15)

இயேசுவின் மரணம் ஆதாமுக்கு மீட்கும் பொருளை மட்டுமல்ல, ஆதாமும் அவர் மூலம் முழு உலகத்திற்கும் பாவத்திலிருந்து விடுதலையும், நியாயப்பிரமாண உடன்படிக்கையின் கீழ் பாவங்களின் சுமையிலிருந்து இஸ்ரயேல் தேசத்திற்கு விடுதலையையும் அளித்தது என்பதை அப்போஸ்தலர் பவுல் விளக்குகிறார்..

## வேதாகம சியோனிஸ்டுகள் (Zionists) முதலில்

சீயோனிசம் என்பது யூத ஜனங்களின் சுயநிர்ணய உரிமை (தானே எடுக்கும் முடிவு)மற்றும் அவர்களின் மூதாதையரின் தாயகமான இஸ்ரயேலில் தேசிய அரசுக்கான இயக்கமாகும். 1948 ஆம்



ஆண்டுக்குள் குடியேறிய முதல் தலைமுறை யூதர்கள் கிட்டத்தட்ட மறைந்துவிட்டனர்.

அவர்கள் ஹோலோகாஸ்டில் (முழுமையான அழிவு)இருந்து தப்பிப்பிழைத்து சியோனிசத்தை ஏற்றுக்கொண்டனர்.

உலகெங்கிலும் உள்ள பெரும்பான்மையான யூதர்கள் வெளிப்படையாக சியோனிஸ்டுகளாக அடையாளம் காட்டினாலும் இல்லாவிட்டாலும், இஸ்ரயேலிய அரசாங்கத்தின் கொள்கைகள் குறித்து அவர்களின் கருத்துக்களைப் பொருட்படுத்தாமல் இருந்தாலும், இஸ்ரயேல் நிலத்துடன் ஒரு தொடர்பையோ அல்லது உறவையோ உணர்கிறார்கள்.

1800களின் பிற்பகுதியில், நவீன சியோனிசத்தின் "தந்தை" ஆஸ்திரிய பத்திரிகையாளர் தியோடர் ஹெர்சல்Theodor Herzl, சியோனிச சிந்தனையின் பல்வேறு இழைகளை ஒருங்கிணைத்து, ஒரு சுயாதீனமான மற்றும் இறையாண்மை கொண்ட யூத அரசின் சர்வதேச அங்கீகாரத்திற்காக வாதிட்டார். இன்று, ஒரு சக்திவாய்ந்த யூத இறையாண்மை கொண்ட அரசு யதார்த்தமாக இருப்பதால், யூத தாயகமாக இஸ்ரயேல் ஜனநாயக அரசு இருப்பதற்கான உரிமையை சியோனிஸ்டுகள் நம்புகிறார்கள் மற்றும் ஆதரிக்கிறார்கள். உலகின் ஒரே யூத நாடு இஸ்ரயேல்.

ஒரு சீயோனிஸ்டாக இருப்பது இஸ்ரயேலிய

அரசாங்கத்தின் கொள்கைகளை ஆதரிப்பதில் இருந்து வேறுப்பட்டது. யூதர்கள் - தங்கள் சொந்த தேசத்தைத் தழுவித் திரும்புவது, கடவுள் ஆபிரகாமுக்கு அளித்த வாக்குறுதிகளுக்குச் சான்றாகும் மேலும் அவருடைய சந்ததியினர் உண்மையானவர்கள். (ஆமோஸ்3:2)

யூத மெய்நிகர் நூலகத்தின்படி, இன்று இஸ்ரயேலில் வசிக்கும் 20 வயதுக்குட்பட்டவர்களில் கிட்டத்தட்ட பாதி பேர் மதச்சார்பற்றவர்களாக அடையாளம் காணப்படுகிறார்கள். இஸ்ரயேலில் வசிக்கும் கிட்டத்தட்ட ஏழு மில்லியன் யூதர்களில் மூன்றில் இரண்டு பங்கு (66.6%) பேர் மட்டுமே இஸ்ரயேலியராக இருப்பதில் "மிகவும் பெருமைப்படுகிறார்கள்" என்று சமீபத்திய கருத்துக் கணிப்பு காட்டுகிறது. தற்போதைய மக்கள் தொகையில் கால் பகுதியினர் (25%) யூதர்கள் அல்லாதவர்கள். இஸ்ரயேல் தேசத்தின் மீது வளர்ந்து வரும் அர்ப்பணிப்பு இருந்தபோதிலும், ஆரம்பகால குடியேற்றத்திற்கு வழிவகுத்த சியோனிசத்தின் மீதான கொண்டிருக்காத பல யூதர்கள் இன்றும் இஸ்ரயேலில் வாழ்கின்றனர். ஒருவேளை இந்த பாதிக்கப்படக்கூடிய குழு, சகரியா 14 மற்றும் எசேக்கியேல் 20:33-44 தீர்க்கதரிசனங்களில் விவரிக்கப்பட்டுள்ள சிரமங்களுக்கு ஆளாக நேரிடும்.

"எருசலேமுக்கு விரோதமாக யுத்தம்பண்ணச் சகல ஜாதிகளையும் கூட்டுவேன், நகரம் பிடிக்கப்படும், வீடுகள் கொள்ளையாகும், ஸ்திரீகள் அவமானப்படுவார்கள், நகரத்தாரில் பாதி மனுஷர் சிறைப்பட்டுப்போவார்கள், மீதியான ஜனமோ நகரத்தை விட்டு அறுப்புண்டுபோவதில்லை. (சகரியா 14:2)

கோகு மற்றும் அவனுடைய கூட்டாளிகளின் தாக்குதலின் போது சிலர் இஸ்ரயேலை விட்டு ஓடிப்போகலாம். "நான் உங்களைக் கோலின் கீழ் செல்லும்படி செய்து, உங்களை உடன்படிக்கையின் கட்டுக்குட்படுத்தி, கலகக்காரரையும் துரோகிகளையும் உங்களைவிட்டுப் பரித்துப்போடுவேன், அவர்களைத் தாங்கள் தங்கும் தேசத்திலிருந்து புறப்படப்பண்ணுவேன், ஆனாலும் அவர்கள் இஸ்ரயேல் தேசத்தில் பிரவேசிப்பதில்லை, அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்."(எசேக்கியேல் 20:37, 38)

## கிளர்ச்சியாளர்களின் வருகை

எசேக்கியேல் 38 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, கோகு மற்றும் மாகோகின் தாக்குதலுக்கு முன்னர், முற்பிதாக்களின் உயிர்த்தெழுதலையும், அவர்கள் முக்கியத்துவத்திற்கு உயர்வதையும் சகரியா 12 சித்தரிக்கிறது. இந்த பழைய ஏற்பாட்டு ஆண்களும் பெண்களும் தான் மக்களைத் தள்ளி நின்று, கடவுள் அவருடைய மகத்தான வல்லமையை வெளிப்படுத்தி, மீட்பதைப் பார்க்கும்படி அவர்களை நம்ப வைப்பார்கள். குறிப்பிட்ட அழிவிலிருந்து கடவுளின் அற்புதமாக இரட்சிப்பு, இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும். அப்போது அவர்கள் மேசியாவை நிராகரித்த தங்கள் கடந்த கால பாவத்தை உணர்ந்துகொள்வார்கள், மேலும்,"அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறது போல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிபார்கள். அந்நாளிலே மெகிதோன் பட்டணத்துப் பள்ளத்தாக்கின் ஊராகிய ஆதாத்ரிம்மோனின் புலம்பலைப்போல எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும். தேசம் புலம்பிக்கொண்டிருக்கும், ஒவ்வொரு வம்சமும் தனித்தனியாகப் புலம்பும், தாவீது குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், நாத்தான் குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், லேவி குடும்த்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், லேவி குடும்பத்தார் தனியேயும் அவர்கள் ஸ்திரீகள் தனியேயும், சீமேயி குடும்பத்தார் தனியேயும், அவர்கள் ஸ்திரீகள் தனியேயும் மற்றுமுண்டான சகல குடும்பங்களிலும் ஒவ்வொரு குடும்பத்தின் மனுஷர் தனித்தனியேயும் அவர்களுடைய ஸ்திரீகள் தனித்தனியேயும் புலம்புவார்கள்." (சகரியா 12:10-14)

இறுதியாக, புதிய உடன்படிக்கை அமலுக்கு வரும். "உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருந்து, உங்கள் அசுத்தங்களையெல்லாம் நீக்கி, உங்களை இரட்சித்து, உங்கள்மேல் பஞ்சத்தைக் கட்டளையிடாமல், கோதுமையை வரவழைத்து, அதைப் பெருகப்பண்ணி, நீங்கள் இனிமேல் ஜாதிகளுக்குள்ளே பஞ்சத்தினாலுண்டாகும் நிந்தையை அடையாதபடிக்கு, விருட்சத்தின் கனிகளையும் வயலின் பலன்களையும் பெருகப்பண்ணுவேன்." (எசேக்கியேல் 36:28-30)

அந்த நேரத்தில், தேசத்தில் கூடாரப் பண்டிகை கொண்டாடப்படும் என்று சகரியா கூறுகிறார். இந்த விருந்து சுக்கோத் அல்லது கூடாரங்களின் பண்டிகை என்று அழைக்கப்படுகிறது.இது பண்டைய இஸ்ரயேலில் வருடாந்திர பயிர்களை அறுவடை செய்வதைக் கொண்டாடுவதற்காகக் கடைப்பிடிக்கப்பட்டது. அந்த நாட்டில் குடியேறிய பிறகு அங்கு வளமான குடியேற்றம் ஏற்பட்டதை அங்கீகரிக்கும் விதமாக இது முதன் முதலில் கொண்டாடப்பட்டது. (லேவியாராகமம் 23:34-36)

கடைசி நாட்களில் (எசேக்கியேல் 20:38)இஸ்ரயேலை விட்டு வெளியேறிய எவரும், புதிய உடன்படிக்கையின் கீழ் இந்த வாழ்க்கையில் பங்கேற்கத் தயாராக திரும்பி வருவார்கள். "இஸ்ரயேல் புத்திரர் சுத்தமான பாத்திரத்தில் காணிக்கையைக் கர்த்தருடைய ஆலயத்துக்குக் கொண்டுவருகிறதுபோல, உங்கள் சகோதரரெல்லாரையும் அவர்கள் குதிரைகளின்மேலும், இரதங்களின்மேலும், குலாரிவண்டில்களின்மேலும், கோவேறு கழுதைகளின் மேலும், வேகமான ஒட்டகங்களின்மேலும், சகல ஜாதிகளிடத்திலுமிருந்து எருசலேமிலுள்ள கர்த்தருக்குக் காணிக்கையாக என் பரிசுத்த பர்வதத்துக்குக் கொண்டுவருவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்." (ஏசாயா 66:20)

இன்று, இது அவிசுவாசிகளுக்கு ஒரு கட்டுக்கதையாகத் தோன்றலாம். ஆனாலும் கடவுளுடைய வார்த்தை உறுதியானது, நமது விசுவாசம் வலுவாக இருக்க வேண்டும். இஸ்ரயேலில் புதிய உடன்படிக்கை தொடங்கப்பட்டது முதல், கடவுள் தம்முடைய நீதியுள்ள இராஜ்யத்தை விரைவாக நிறுவ வேண்டும் என்ற ஜெபத்தை நாமும் எதிரொலிப்போமாக.

சகோதரர் ஆல்பர்ட் ஓ. ஹட்சனின் (Albert O. Hudson,)"யாக்கோபின் இக்கட்டு காலம்" என்ற தலைப்பிலான ஒரு சொற்பொழிவின் இறுதி வார்த்தைகள், அதை இவ்வாறு சித்தரிக்கின்றன:

"மனிதர்கள் நேரத்தை அளவிடுவது போல, காலம் நீண்டதாகத் தோன்றலாம், ஆனால் இப்போது காணப்படுகிற காரியங்களின் வளர்ச்சி, இனி வரப்போகும் காரியங்கள் விதிக்கப்பட்டதாகவும், மாற்ற முடியாததாகவும் இருக்கும். யோயேல், ஏசாயா,எசேக்கியேல், தானியேல், சகரியா, வெளிப்படுத்துதலின் யோவான் ஆகியோரால் சித்திர தீர்க்கதரிசன வடிவில் வழங்கப்பட்டதன் யதார்த்தத்தை இந்த உலகம் ஒரு நாள் உணரும், மேலும் அந்த பார்வையில், இந்த அலட்சியமான மற்றும் நம்பிக்கையற்ற நவீன உலகம் எதிர்கொள்ளக்கூடிய மிகப் பெரிய மற்றும் ஆத்துமாவைத் தூண்டும் நிகழ்வுக்கு அரங்கம் தயாராகிவிட்டது என்பதை உணரும்."



# புல் மீது மழை
## இஸ்ரயேல் தேவனுடைய இராஜ்யத்திற்கு பிரவேசித்தல்



— David Rice

"நாம் சேனைகளின் கர்த்தரைத் தேடவும் தீவிரித்துப்போவோம் வாருங்கள். நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள்..அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும்....வருவார்கள். ... தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி...." (சகரியா8:21-23)

நாம் இராஜ்யத்தை நோக்கி முன்னேறி வருகிறோம். இன்னும் காலம் கடக்க வேண்டியிருக்கிறது. ஆனால் இஸ்ரயேல் தொடர்பான சூழ்நிலைகள் முன்னேறி வருகின்றன. இஸ்ரயேல் அரசின் 70 வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், 2018 ஆம் ஆண்டில் ஏராளமான இஸ்ரயேலியர்களால் பாடப்பட்ட எபிரெய மொழியில் ஒரு அழகான பாடல் உள்ளது. "அல்லேலூயா" என்பது பாடலின் தலைப்பு மற்றும் கடவுளைப் புகழ்ந்து அடிக்கடி சொல்லப்படும் வார்த்தையாகும். 1

விஷயங்கள் நன்றாக இருக்கிறது என்று இஸ்ரயேலுக்குத் தெரிகின்றன. அக்டோபர் 7, 2023 நெருக்கடிக்குப் பிறகு, இஸ்ரயேலின் எதிரிகள் பலவீனமடைந்துள்ளனர் - ஹமாஸ், ஹெஸ்பொல்லா,ஈரான் மற்றும் இப்போது சிரியா.வரவிருக்கும் ஆண்டுகளில் என்ன நடக்கக்கூடும் என்பதை நாம் ஆர்வத்துடன் கவனிக்கிறோம். இருப்பினும், எசேக்கியேல் 38 இல் விவரிக்கப்பட்டுள்ளபடி, இஸ்ரயேலில் இறுதி மோதலைத் தொடர்ந்து இராஜ்யத்தின் அறிமுகம் இருக்கும் என்று பொதுவாக ஒப்புக்கொள்ளப்படுகிறது.




குறிப்பாக, எசேக்கியேல் 38 ல் இஸ்ரயேலின் எதிரிகளை உருவாக்கும் நாடுகளுடன், அவர்களின் நெருங்கிய அரபு அண்டை நாடுகளை உள்ளடக்கவில்லை. இஸ்ரயேலின் அரேபிய அண்டை நாடுகள் மூன்று முறை இஸ்ரயேலைத் தாக்கியது - 1948, 1967, மற்றும் 1973 - இப்போது கடந்துவிட்டன. எகிப்தும் ஜோர்டானும் இஸ்ரயேலுடன் முறையான சமாதான ஒப்பந்தங்களைச் செய்துள்ளன, சவுதி அரேபியா முறைசாரா முறையில் செய்துள்ளது, மேலும் மற்றவர்களின் சிதறல்கள் 2020 ஆம் அண்டு ஆபிரகாம் ஒப்பந்தங்களில் நுழைந்தன.

மற்றொரு ஈரானிய கூட்டாளியான சிரியாவின் ஆசாத் ஆட்சி, சுன்னி வல்லமைகளால் உள்ளே இருந்தே தூக்கியெறியப்பட்டுள்ளதுமற்றும் அதன் கூட்டாளிகளான ஹமாஸ், ஹெஸ் பொல்லா மற்றும் ஏமன் ஆகியவை கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. மற்றொரு ஈரானிய கூட்டாளியான சிரியாவின் அசாத் ஆட்சி, சுன்னி சக்திகளால் உள்ளே இருந்தே தூக்கியெறியப்பட்டது. அதைத் தொடர்ந்து, இஸ்ரயேலும் அமெரிக்காவும் சிரியாவின் விமானப்படை மற்றும் கடற்படை சக்திகளை அழித்தன.

### எசேக்கியேல் 38

எசேக்கியேல் 38ல் உள்ள கூட்டணி கோகு, பெர்சியா, குஷ்,லிபியா, கோமர் மற்றும் தோகர்மா (எசேக்கியேல்38:3-6)

அவர்கள் பெரும்பாலும் ரஷ்யா, ஈரான், ஏமன்,லிபியா, ஜெர்மனி மற்றும் துருக்கியுடன் தொடர்புடையவர்கள்.இது எங்கள் சிறந்த தீர்ப்பையும் வெளிப்படுத்துகிறது. இருப்பினும், மாறுபாடுகளுடன் சில சிந்தனைமிக்க கட்டுரைகள் உள்ளன, எடுத்துக்காட்டாக, பியூட்டீஸ் ஆஃப் தி ட்ரூத், நவம்பர் 2022 (Beauties of the Truth, November 2022)

"தோகர்மாவின் வம்சாவழி, நவீன சீனா ஒரு கலாச்சார வழித்தோன்றலா ? "எனவே, காலம் கடந்து செல்லும் போது நாம் அதை கவனிக்கலாம்.

மேலே உள்ள பட்டியிலில், எசேக்கியேலின் கோமர் நவீன கால ஜெர்மனி என்ற கூறப்படுகிறது. இது சரி என்றால், மேற்கு ஐரோப்பாவில் ஜெர்மனி முன்னணி நாடாக இருப்பதால், இது சூழ்நிலைகளில் மாற்றத்தைக் குறிக்கலாம். தற்போது, ரஷ்யா (கோகு) மற்றும் ஜெர்மனி (கோமர் ) உக்ரேனிய மோதலில் எதிர் பக்கங்களில் உள்ளன. மேலே உள்ளதெடர்புகள் சரியாக இருந்தால், காலப்போக்கில், ரஷ்யாவிற்கும் ஐரோப்பாவிற்கும் இடையே ஒரு கூட்டுறவு மனப்பான்மை உருவாக வேண்டும் என்று தோன்றுகிறது.

எசேக்கியேல் 38 -ல் விவரிக்கப்பட்டுள்ள இஸ்ரயேலுக்கு எதிரான இறுதி மோதலுக்கு, இது மேற்கத்திய செல்வாக்கைக் கொண்டிருக்கும் என்று தெரிகிறது. இதை நாம் வெளிப்படுத்துதல் 16 மற்றும் அர்மகெதோன் மோதல் பற்றிய அதன் குறிப்பிலிருந்து பெறுகிறோம். வெளிப்படுத்துதல் *16:13*, ஆறாவது வாதையை விவரிக்கிறது. "அப்பொழுது, வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத்தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டுவரக் கண்டேன்" என்று கூறுகிறது. இவை பொதுவாக மேற்கத்திய கலாச்சாரத்தின் தாக்கங்களாக அங்கீகரிக்கப்படுகின்றன. அந்த மிருகம் போப்பமைப்பைக் குறிக்கிறது, மேலும் வலுசர்ப்பம் என்பது மேற்கத்திய அரசியல் சக்திகளின் மீது சாத்தானின் கட்டுப்பாட்டைக் குறிக்கிறது. வெளிப்படுத்துதல் 19:20ன் படி, கள்ளத்தீர்க்கதரிசி வெளிப்படுத்துதல் 13:11ல் உள்ள இரண்டு கொம்புகள் கொண்ட மிருகத்துடன் தொடர்புடையவர்.

இது வழக்கமாக இங்கிலாந்து திருச்சபையையும் மேற்கத்திய கலாச்சாரத்தின் ஒரு பகுதியையும் அடையாளப்படுத்துவதாகக் கருதப்படுகிறது. 2



இந்த மூன்று கட்சி கூட்டணியின் விளைவை வெளிப்படுத்தல் *16:14* விவரிக்கிறது. "அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள், அவைகள் பூலோகமெங்குமுள்ள இராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது. " யுத்தம் எங்கே நடக்கும் ? "அப்பொழுது எபிரெயு பாஷையிலே அர்மகெதோன் என்னப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான்" என்று 16ம் வசனம் கூறுகிறது. அது எசேக்கியேல் 38:3இன் இறுதிக் கூட்டத்தைக் குறிப்பதாகத் தெரிகிறது அப்படியானால், எசேக்கியேல் 38, சில ஐரோப்பியப் படைகளை உள்ளடக்கியுள்ளது. அது கோமர் ஜெர்மனியாக இருப்பதினால் ஒத்துப்போகும்.

**திராட்சை ஆலை**

இறுதி மோதலில் சில ஐரோப்பிய

தலையீடுகள் இருந்ததற்கான மற்றொரு காரணியும் உள்ளதாக பாிந்துரைக்கப்படுகிறது. வெளிப்படுத்தல் 14:14 அறுவடையை விவரிக்கிறது, இயேசு தலையில் கிரீடத்தோடும், கையில் ஒரு அரிவாளோடும் ஒரு மேகத்தின் மீது அமர்ந்திருக்கிறார். அதைத் தொடர்ந்து, "பூமியின் விளைவு அறுப்புண்டது" (வசனம் 16) பிறகு திராட்சை ஆலையை மிதிப்பது, அதாவது கிறிஸ்தவமண்டல சக்திகள் மீதான இறுதி நியாயத்தீர்ப்பு வருகிறது.



"நகரத்திற்குப் புறம்பேயுள்ள அந்த ஆலையிலே அது மிதிக்கப்பட்டது, அந்த ஆலையிலிருந்து ஆயிரத்தறுநூறு ஸ்தாதி தூரத்திற்கு இரத்தம் புறப்பட்டுக் குதிரைகளின் கடிவாளங்கள் மட்டும் பெருகிவந்தது." என்று வெளிப்படுத்துதல் 14:20 கூறுகிறது. 1600 என்ற எண் *40 x 40* ஆகும், இது கிறிஸ்தவத்தின் மீதான இறுதித் தீர்ப்பின் உச்சத்தை வெளிப்படுத்துகிறது. ஆனால் இந்த நியாயத்தீர்ப்பு எங்கிருந்து தொடங்குகிறது ?அது "நகரம் இல்லாமல்" தொடங்குகிறது என்று 16ம் வசனம் கூறுகிறது. அதே அதிகாரத்தில் பாபிலோன் நகரம் குறிப்பிடப்படுள்ளது, மேலும் அங்கு பெயரிடப்பட்ட ஒரே நகரம் அதுதான். ஆனால் பாபிலோனுக்கு வெளியே கிறிஸ்தவமண்டலம் எப்படி மிதிக்கப்பட முடியும் ? பதில் என்னவென்றால், வலுசர்ப்பம், மிருகம், கள்ள தீர்க்கதரிசிகள் - கூட்டணியின் சக்தி - இறுதி நியாயத்தீர்ப்பு தொடங்கும் இஸ்ரயேலில் கூடுவதற்கு ஈர்க்கப்படுகிறது.

இது யோயேலில் உள்ள ஒரு தீர்க்கதரிசனத்தால் ஆதரிக்கப்படுவதாகத் தெரிகிறது. மூன்றாம் அதிகாரம் இஸ்ரயேலுக்கு எதிரான நாடுகளின் இறுதிக் கூட்டத்தை விவரிக்கிறது. "நான் சகல ஜாதியாரையும் கூட்டி, யோசபாத்தின் பள்ளத்தாக்கிலே அவர்களை இறங்கிப்போகப்பண்ணி, அவர்கள் என் ஜனத்தையும் இஸ்ரயேலென்னும் என் சுதந்தரத்தையும் புறஜாதிகளுக்குள்ளே சிதறடித்து என்தேசத்தைப் பங்கிட்டுக்கொண்டதினித்தமும் ..." (யோயேல் 3-2)அங்கு அவர்கள் மீது தீர்ப்பு வரும். 12ம் வசனம் இப்படியாக தொடர்கிறது,"ஜாதிகள் எழும்பி யோசபாத்தின் பள்ளத்தாக்குக்கு வருவார்களாக, சுற்றிலுமுள்ள ஜாதிகளை நியாயந்தீர்க்க அங்கே நான் வீற்றிருப்பேன். பயிர் முதிர்ந்தது, அரிவாளை நீட்டி அறுங்கள், வந்து இறங்குங்கள், ஆலை நிரம்பியிருக்கிறது, ஆலையின் தொட்டிகள் வழிந்தோடுகிறது, அவர்களுடைய பாதகம் பெரியது." இஸ்ரயேலில் திராட்சை ஆலை மிதிக்கப்படுகிறது.

பின்னர் வெளிப்படுத்துதல் 16:19, பாபிலோன் என்கிற கிறிஸ்தவமண்டலம், பிளவுபட்டுள்ளது என்பதை விளக்குகிறது. 13ஆம் வசனத்தில் ஒன்றுப்பட்ட வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசி ஆகியோரின் கூட்டணி அர்மகெதோனின் விளைவாக பிளவுபட்டுள்ளது. "அப்பொழுது மகா நகரம் மூன்றுபங்காகப் பிரிக்கப்பட்டது, புறஜாதிகளுடைய பட்டணங்கள் விழுந்தன. மகா பாபிலோனுக்குத் தேவனுடைய உக்கிரமான கோபக்கினையாகிய மதுவுள்ள பாத்திரத்தைக் கொடுக்கும்படி அது அவருக்கு முன்பாக நினைப்பூட்டப்பட்டது" (வசனம் 19) அவர்கள் தாயகம் மேலும் பிரச்சனைகளில் உள்ளனர் (வசனங்கள் 20, 21) ஆனால் கூட்டணியை உடைக்கும் தாக்கம், இஸ்ரயேலில் அவர்கள் பெற்ற தோல்வியுடன் தொடங்குகிறது.

## யோசபாத்தின் விடுதலை

2நாளாகமம் 20 -ல் இதற்கு இணையயான ஒரு காரியம் உள்ளது. அம்மோன், மோவாப், ஏதோம் ஆகிய மூன்று படைகள் யோசபாத்தை வீழ்த்துவதற்காக அவனுக்கு எதிராக ஒன்றுகூடின.

யூதா மக்கள் அனைவரும் தங்கள் குழந்தைகள், மனைவிகள் மற்றும் குழந்தைகளுடன் கர்த்தருக்கு முன்பாக நின்று யோயேல் 2:12-14ல் உள்ளதைப் போல, தேவனுடைய பராமரிப்புக்காக ஜெபித்தனர். 2நாளாகமம் 20:14 ல், தீர்க்கதரிசி யகாசியேல் கடவுளின் சார்பாக சபையிடம் பேசுகிறார், கடவுள் இஸ்ரயேலை விடுவிப்பார் என்று உறுதிப்படுத்துகிறார். அது போல முற்பிதாக்கள் சரியான நேரத்தில் தோன்றி, இஸ்ரயேலின் சார்பாக கடவுள் தலையிடுவார் என்று உறுதியளிப்பார்கள்.

பின்னர் யகாசியேல் குறிப்பிடத்தக்க ஒன்றைச் சேர்க்கிறார். "...இந்த யுத்தம் உங்களுடையதல்ல, தேவனுடையது... இந்த யுத்தத்தைப் பண்ணுகிறவர்கள் நீங்கள் அல்ல,..நீங்கள் தரித்து நின்று கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்..பயப்படாமலும் கலங்காமலும் இருங்கள்...அப்பொழுது யோசபாத் தரைமட்டும் முகங்குனிந்தான், சகல யூதா கோத்திரத்தாரும் எருசலேமின் குடிகளும் கர்த்தரைப் பணிந்துகொள்ளக் கர்த்தருக்கு முன்பாகத் தாழவிழுந்தார்கள்." (2நாளாகமம் 20:15, 17, 18)

காலையில், அவர்கள் உயரத்திலிருந்து , நெருங்கி வரும் எதிரியைப் பார்த்தபோது, மோவாபியரும் அம்மோனியரும் ஏதோமுக்கு எதிராகப் போரிடுவதையும், பின்னர் ஒருவரையொருவர் எதிர்த்துப் போராடுவதையும் கண்டார்கள்.இஸ்ரயேல் போரிடமாலேயே மூன்று எதிரிகளும் தோற்கடிக்கப்பட்டனர்.

## எசேக்கியேல் விடுதலை

எசேக்கியா இராஜாவின் காலத்தில் இதேபோன்ற அற்புதமான விடுதலையின் நிகழ்வு நிகழ்ந்தது, இது ஏசாயா 37 மற்றும் 38 அதிகாரங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. சனகெரிப் இராஜாவின் கீழ் அசீரியாவின் வலிமை, எருசலேமை சரணடைய அழைத்தது. எசேக்கியா சனகெரிப்பின் கடிதத்தை ஆலயத்திற்கு எடுத்துச் சென்று, கடவுளுக்கு முன்பாக அதை விரித்து, இஸ்ரயேலுக்கு எதிர்க்கப் போதுமான பலம் இல்லை என்பதை உறுதிப்படுத்தி, கடவுளின் விடுதலைக்காக மன்றாடினார், அதை அவர் கொடுத்தார். கடவுள் இஸ்ரயேலைப் பாதுகாத்ததினால். எதிரி விரைவில் 1,85,000 பேரை இழந்தார். மீண்டும் ஒரு முறை இஸ்ரயேல் போரிடாமல் ஜெயித்தது. (2இராஜாக்கள் *19:35*, ஏசாயா *37:36*) "அப்பொழுது அசீரியா இராஜாவாகிய சனகெரிப் பிரயாணப்பட்டுத்திரும்பிப்போய், நினிவேயில் இருந்து விட்டான்." பின்னர் அவர் தனது இராஜ்யத்தை இழந்தார் (வசனங்கள் 37,38) மீண்டும், இஸ்ரயேல் போர் செய்யவில்லை, கடவுள் அவர்களை விடுவித்தார்.

மீகா**5:5-7**

தீர்க்கதரிசி மீகா ஏசாயாவின் சமகாலத்தவர். இரண்டு தீர்க்கதரிசிகளும் எசேக்கியா விடுவிக்கப்பட்ட காலத்தில் வாழ்ந்தனர்.மீகா ஐந்தாம் அதிகாரம் அதே அனுபவத்தைப் பற்றிப் பேசுகிறன்றன. 2-4 வசனங்கள் இயேசுவின் பிறப்பைப் பற்றியும், இஸ்ரயேலின் புலம்பெயர்ந்தோர் பற்றியும், சுவிசேஷ யுகத்தில் இயேசுவின் மகிமையைப் பற்றியும் பேசுகின்றன. பின்னர் வசனம் 5, யுகத்தின் முடிவில் இயேசு இஸ்ரயேலை விடுவிப்பதைப் பற்றிப் பேசுகிறது.

"இவரை சமாதானக்காரணர்" அதாவது, இயேசு இஸ்ரயேலை அவர்களின் இறுதி ஆபத்திலிருந்து விடுவிப்பார். "அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போது, நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும்

அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்." (மீகா 5-5) "மேய்ப்பன் என்ற சொல் "இராஜா" என்பதற்கான ஒரு மரபுத் தொடராகும்." இஸ்ரயேலை விடுவிப்பதற்காக கடவுள் ஏழு இராஜாக்களையும் எட்டு பிரபுக்களையும் எழுப்புவார். ஏழு இராஜாக்கள் ஏழு நிலைகளில் வளர்ந்த சபை வகுப்பார். இவர்கள் மேலிருந்து தலையிடுவார்கள். எட்டு இளவரசர்களும் பழைய ஏற்பாட்டின் முற்பிதாக்கள். இவர்கள் சபையின் ஏழு நிலைகளுக்குப் பிறகு எழுப்பப்படுவதினால், "எட்டு"என்று குறிப்பிடப்படுகிறார்கள்.

இவர்கள் இஸ்ரயேலை தங்கள் மீட்பராகிய இயேசுவிடம் சுட்டிக்காட்டுவார்கள். இது தேசிய மனந்திரும்புதலுக்கும், மனமார்ந்த நன்றியுணர்வுக்கும், நன்றியுள்ள இருதயங்கள் கடவுளிடம் திரும்புவதற்கும் வழிவகுக்கும். இஸ்ரயேல் ஜனங்கள் மேசியாவை ஆவலுடன் போற்றுவார்கள், மேலும் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை உலகிற்குப் பரப்புவார்கள்.

## சண்டை இல்லாமல் வழங்கப்படுதல்

கவனிக்கவும் - இஸ்ரயேல் அதன் இறுதி விடுதலையில் போராடுவதில்லை. இஸ்ரயேல் தாக்கப்படும், கடவுளிடம் ஜெபம் செய்வதைத் தவிர வேறு நம்பிக்கை இல்லாமல் போகும் - பின்னர், ஒரு குறிப்பிடத்தக்க விடுதலை வரும். இயேசு, திருச்சபையுடன் சேர்ந்து, அவர்களை விடுவிப்பார். இஸ்ரயேலின் இருதயங்கள் பொங்கி எழுந்து, தாழ்மையுடன், நன்றியுணர்வோடு இருக்கும், ஆனால் இஸ்ரயேலர் தங்கள் பாதுகாப்பிற்காகப் போராடாமல், கடவுளின் கரம் அவர்களைப் பாதுகாப்பதை உலகம் காணும். வசனம் 6, "இவர்கள் அசீரியா தேசத்தையும், நிம்ரோதின் தேசத்தையும், அதினுடைய வாசல்களுக்கு உட்புறமாகப் பட்டயத்திற்கு இரையாக்குவார்கள், அசீரியன் நம்முடைய தேசத்தில் வரும்போதும், நம்முடைய எல்லைகளை மிதிக்கும் போதும், அவனுக்கு நம்மைத் தப்புவிப்பார்." என்று விளக்குகிறது. மேலும் இஸ்ரயேலர்கள் ? "யாக்கோபிலே மீதியானவர்கள் கர்த்தராலே வருகிற பனியைப்போலவும், மனுஷனுக்குக் காத்திராமலும், மனுபுத்திரருக்குத் தாமதியாமலும், பூண்டுகள் மேல் வருகிற மழைகளைப்போலவும், அநேக ஜனங்களின் நடுவிலே இருப்பார்கள்." (மீகா 5:7)உலகம் அதைப் பார்க்கும். இஸ்ரயேல் அதைப் பாராட்டும்.பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் இஸ்ரயேலை மேசியாவினிடம் வழிநடத்துவார்கள். யோசபாத் செய்தது போல், இஸ்ரயேல் மனந்திரும்பிய பயபக்தியுடனும் நன்றியுணர்வுடனும் பூமியில் பணிந்து கொள்ளும்.

பின்னர், காலைப் பனியின் இனிமையான தாக்கம், அமைதியான மற்றும் புத்துணர்ச்சியூட்டும் "புல்லின் மீது பொழியும் மழை", களைப்பான உலகத்தை புதுபிக்கும். அவர்கள் கடவுளின் அற்புதமான பராமரிப்பைக் கவனித்திருப்பார்கள். படிப்படியாக,கடவுளின் ஜனங்கள் வழியாக வரும் ஜீவனை காண இந்த உலகத்தின் கண்கள் திறக்கும். அவர்களுக்கு நம்பமுடியாததாக இருக்கும். "நாம் கர்த்தருடைய சமுகத்திற்கு.... தீவிரித்துப்போவோம் வாருங்கள்....எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், ...நாங்களும் போவோம் என்று சொல்லுவார்கள்...."

தேர்ந்தெடுக்கப்பட்ட ஜனங்கள்

# இஸ்ரயேல் கடவுளின் சுதந்தரம்



— David Stein

"அக்காலத்திலே இஸ்ரயேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும். அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர் - எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரயேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்." (ஏசாயா 19:24-25)

ஒருசுதந்தரத்தை நாம் சிந்திக்கையில், பரம்பரையான ஒரு சொத்தைப் பற்றி அல்லது இறந்து போன குடும்ப உறுப்பினர் அல்லது நண்பரிடமிருந்து பெற்ற உடைமைகளைப் பற்றி நாம் நினைக்கிறோம். கடவுள் ஒரு சுதந்திரத்தைப் பெறுகிறார் என்ற கூற்று ஒரு இயல்பான கேள்வியை எழுப்புகிறது: அவர் இந்த பரம்பரையை யாரிடமிருந்து பெறுகிறார்?

எபிரெய மொழியில், "சுதந்திரம்" என்பது ஒரு "பங்கு" அல்லது "பகுதி" என்பதைக் குறிக்கிறது. இந்த வெளிச்சத்தில், யேகோவா தேவனின் சுதந்தரம் என்பது அவரது தெய்வீகத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அவர் பெறும்,பங்கு அல்லது பாகமாகும்.

உதாரணமாக, கடவுளின் திட்டத்தின் இறுதிக்கட்டத்தில் ,அவர் ஒரு தெய்வீக குடும்பத்தைக் கொண்டிருப்பார்! இயேசு கிறிஸ்துவும் திருச்சபையும் தெய்வீக இயல்பைக் கொண்ட ஒரு குடும்பமாக இருப்பார்கள். இது யேகோவா தேவனின் உண்மையான சுதந்தரமாகும். "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற



நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்.."(எபேசியர்1:18)

யேகோவா தேவனின் மற்றொரு சுதந்தரம் இஸ்ரயேல் தேசம். இந்த சுதந்தரம் ஆபிரகாமிய உடன்படிக்கையின் விதி முறைகளிலிருந்து விளைகிறது. ஆபிரகாமுக்கு கடவுள் அளித்த வாக்குறுதி அவரது சந்ததியினருக்கு ஆசீர்வாதங்களை உறுதி செய்தது. அந்த வாக்குறுதி :"நீ உன் புத்திரன் என்றும், உன் ஏகசுதன் என்றும் பாராமல் அவனை ஒப்புக்கொடுத்து இந்தக் காரியத்தைச் செய்தபடியால், நான் உன்னை ஆசீர்வதிக்கவே ஆசீர்வதித்து, உன் சந்ததியை வானத்து நட்சத்தரங்களைப்போலவும், கடற்கரை மணலைப்போலவும் பெருகவே பெருகப்பண்ணுவேன் என்றும், உன் சந்ததியார் தங்கள் சத்துருக்களின் வாசல்களைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள் என்றும் நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால்,உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (ஆதியாகமம்22:16-18)

பூமியிலுள்ள அனைத்து தேசங்களையும் ஆசீர்வதிப்பதில் தனது "சந்ததி" (சந்ததியினர்) ஈடுபடுவார்கள் என்பதை ஆபிரகாம் புரிந்துகொண்டார். ஆபிரகாமின் "சந்ததி" யாராக இருக்கும் என்பதற்கான விரிவான திட்டம் ஆபிரகாமுக்குத் தெரியாது. கடவுளின் பெரிதான பார்வையில் கிறிஸ்துவின் சரீரமான சபையின் அழைப்பும் அடங்கும். "சுவிசேஷத்தைக் குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம்

பகைஞராயிருக்கிறார்கள், தெரிந்து கொள்ளு தலைக்குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்டவர்களாயிருக்கி றார்கள். தேவனுடைய கிருபைவரங்களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவை களே"(ரோமர் 11:28, 29)

இதன் விளைவாக, ஆபிரகாமின் "சந்ததி" இறுதியில் இஸ்ரயேல் தேசமாக மாறியது, அதாவது யேகோவா தேவனின் தயவு பெற்ற தேசம். "இஸ்ரயேல் புத்திரரே, கர்த்தராகிய நான் எகிப்து தேசத்திலிருந்து வரப்பண்ணின முழுக் குடும்பமாகிய உங்களுக்கு விரோதமாய்ச் சொல்லிய இந்த வசனத்தைக் கேளுங்கள். பூமியின் எல்லா வம்சங்களுக்குள்ளும் உங்களை மாத்திரம் அறிந்து கொண்டேன், ஆகையால் உங்களுடைய எல்லா அக்கிரமங்களினிமித்தமும் உங்களைத் தண்டிப்பேன்." (ஆமோஸ்3:1, 2)

**இஸ்ரயேல் தனித்துவமானது**

பூமியிலுள்ள எல்லா குடும்பங்களிலும், இஸ்ரயேலர் மட்டுமே யேகோவா தேவனுடன் நியாயப்பிரமாண உடன்படிக்கையை வைத்திருந்தனர். "இந்நாளில் நீங்கள் இருக்கிறதுபோல, தமக்குச் சுதந்தரமான ஜனமாயிருக்கும்படி, கர்த்தர் உங்களைச் சேர்த்துக்கொண்டு, உங்களை எகிப்து என்னும் இருப்புக்காளவாயிலிருந்து புறப்படப்பண்ணினார்." (உபாகமம்4:20)

யேகோவா தேவனின் சுதந்தரமாக, இஸ்ரயேல் பல ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கிறது, ஆனால் அது அவர்களை கடவுளைப் பின்பற்றுவதில் கணக்குக் கொடுக்கவும் செய்திருக்கிறது.

பின்னர், ஒரு தேசமாக, அவர்கள் பல முறை தோல்வியடைந்தனர், இறுதியில் கடவுளின் தயவிலிருந்து வெளியேற்றப்பட்டனர், சுவிசேஷ யுகத்தில் அவர்களுக்கு பதிலாக புறஜாதி விசுவாசிகள் இடம் பெற்றனர். ஆனால் நிராகரிக்கப்பட்டது ஒரு காலத்திற்கு மட்டுமே, அந்த நேரத்தில் அவருடைய தெய்வீக திட்டத்தின் மற்றொரு அம்சம் நிறைவேற்றப்பட்டது. அவர் ஆபிரகாமுக்கு வாக்களித்தபடியே அவருடைய கிருபை மீண்டும் திரும்பும். "கர்த்தரைத் தங்களுக்குத் தெய்வமாகக் கொண்ட ஜாதியும், அவர் தமக்குச் சுதந்தரமாகத் தெரிந்துகொண்ட ஜனமும் பாக்கியமுள்ளது." (சங்கீதம்33:12)

"தம்முடைய தாசனாகிய தாவீதைத் தெரிந்துகொண்டு, ஆட்டுத்தொழுவங்க ளிலிருந்து, அவனை எடுத்தார். கறவலாடுகளின் பின்னாகத் திரிந்த அவனை, தம்முடைய ஜனமாகிய யாக்கோபையும் தம்முடைய சுதந்தரமாகிய இஸ்ரயேலையும் மேய்ப்பதற்காக, அழைத்துக்கொண்டுவந்தார். இவன் அவர்களைத் தன் இருதயத்தின் உண்மையின்படியே மேய்த்து, தன் கைகளின் திறமையினால் அவர்களை நடத்தினான்." (சங்கீதம்78:70-72)

78:70-72) கடவுளின் சுதந்தரத்தை மேய்ப்பதில் தாவீதுக்கு ஒரு சிறப்புப் பங்கு இருந்தது.

ஆபிரகாமின் சந்ததியின் ஆசீர்வாதம் பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும் மக்களுக்கும் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும். இவை கடவுளுடைய இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களாக இருக்கும். ஏசாயாவில் உள்ள ஒரு அழகான தீர்க்கதரிசனம் இதைப் பற்றி மேலும் சில வெளிச்சங்களை வீசுகிறது :-"அப்பொழுது கர்த்தர் எகிப்தியருக்கு அறியப்படுவார், எகிப்தியர் கர்த்தரை அக்காலத்திலே அறிந்து, அவருக்குப் பலிகளோடும் காணிக்கைகளோடும் ஆராதனைசெய்து, கர்த்தருக்குப் பொருத்தனைகளைப்பண்ணி அவைகளைச் செலுத்துவார்கள். கர்த்தர் எகிப்தியரை வாதையினால் அடிப்பார், அடித்துக் குணமாக்குவார், அவர்கள் கர்த்தரிடத்தில் மனந்திரும்புவார்கள், அப்பொழுது அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்டு, அவர்களைக் குணமாக்குவார். அக்காலத்திலே எகிப்திலிருந்து



அசீரியாவுக்குப் போகிறபெரும்பாதை உண்டாயிருக்கும், அசீரியர் எகிப்துக்கும், எகிப்தியர் அசீரியாவுக்கும் வந்து, எகிப்தியர் அசீரியரோடுங்கூட ஆராதனை செய்வார்கள். அக்காலத்திலே இஸ்ரயேல் எகிப்தோடும் அசீரியாவோடும் மூன்றாவதாகப் பூமியின் நடுவில் ஆசீர்வாதமாயிருக்கும். அவர்களைக் குறித்துச் சேனைகளின் கர்த்தர் - எகிப்தியராகிய என் ஜனமும், அசீரியராகிய என் கரத்தின் கிரியையும், இஸ்ரயேலராகிய என் சுதந்தரமும் ஆசீர்வதிக்கப்பட்டது என்று சொல்லி, அவர்களை ஆசீர்வதிப்பார்." (ஏசாயா19:21-25)

பண்டைய காலங்களில், ஒரு சாலை சுற்றியுள்ள தரை மட்டத்தை விட உயரமாக கட்டப்பட்டதால் அது நெடுஞ்சாலை என்று அழைக்கப்பட்டது. தடைகள் நீக்கப்பட்டன, சீரற்ற தரை சமன் செய்யப்பட்டது, தடையற்ற பயணத்திற்கு பாதை சீரமைக்கப்பட்டது. "வழியை உயர்த்தி, உயர்த்தி, அதைச் செம்மைப்படுத்தி, இடறல்களை என் ஜனத்தின் வழியிலிருந்து எடுத்துப்போடுங்கள் என்னப்படும்." (ஏசாயா57:14)

ஏசாயா 19 - ம் அதிகாரத்தின் தீர்க்கதரிசனமான "பெரும் பாதை" இறுதியில் மத்திய கிழக்கில் நிலவும் அமைதியைக் காட்டுகிறது. எகிப்து மற்றும் அசீரியா இரண்டும் இஸ்ரயேலரின் பண்டைய எதிரிகளாக இருந்தன. ஆனால் இந்த எதிரிகள் யெகோவா தேவனின் வணக்கத்திற்கு மனமாற்றப்பட்டு, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவித்து, இஸ்ரயேலுடன் சக வணக்கத்தாராக மாறுவார்கள்.

**புறஜாதிகளின் ஆசீர்வாதம்**

இஸ்ரயேல் முழுமையாக கடவுளின் தயவை மீண்டும் பெறும்போது, புறஜாதி உலகத்தை,யேகோவா தேவனை அங்கீகரிக்கும் நிலைக்கும், அவருடனான உறவு மீண்டும் ஏற்படும் நிலைக்கும் வழிநடத்தும் பாக்கியத்தைப் பெறுவார்கள் - "யாக்கோபின் கோத்திரங்களை எழுப்புவும், இஸ்ரயேலில் காக்கப்பட்டவர்களைத் திருப்பவும், நீர் எனக்குத் தாசனாயிருப்பது அற்பகாரியமாயிருக்கிறது, நீர் பூமியின் கடைசிபரியந்தமும் என்னுடைய இரட்சிப்பாயிருக்கும்படி உம்மை ஜாதிகளுக்கு ஒளியாகவும் வைப்பேன் என்கிறார்." (ஏசாயா49:6) அப்போது புறஜாதியினர் இஸ்ரயேலின் மீது இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களைக் காண்பார்கள், மேலும் புதிய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களில் பங்கேற்க விரும்புவார்கள் :"திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்."(ஏசாயா2:3)

ஏசாயா 19 ல் குறிப்பிடப்பட்டுள்ள "எகிப்து" மற்றும் "அசீரியா" பற்றிய தீர்க்கதரிசன அடையாளக் குறிப்புகள், புறஜாதி உலகின் இரண்டு பகுதிகளைக் குறிக்கலாம்.எகிப்து பெயரளவிலான கிறிஸ்தவ உலகத்தை சித்தரிக்கிறது, அசீரியாவில் கிறிஸ்தவமல்லாத அல்லது புறஜாதிகளின் கூறுகள் உள்ளன. இரு பகுதியினரும் இஸ்ரயேல் மீது இராஜ்யத்தின் ஆசீர்வாதத்தைக் காண்பார்கள். இஸ்ரயேலின் சமாதானமும், செழிப்பும்



ஆசீர்வாதத்தில் பங்கு கொள்ள ஒரு விருப்பத்தைத் தரும் . "அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கெள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (சகரியா 8:23)

கடவுளுடைய இராஜ்யத்தின் ஆரம்ப நாட்களில் இஸ்ரயேலை ஒரு பெற்றோராக எசேக்கியேல் தீர்க்கதரிசி சித்தரிக்கிறார். இவர்கள் புறஜாதி நாடுகளை வளர்த்து கற்பித்தார். "ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன். அப்பொழுது உன் தமக்கைகளையும் உன் தங்கைகளையும் நீ சேர்த்துக்கொள்ளுகையில், உன் வழிகளை நினைத்து நாணுவாய், அவர்களை நான் உனக்குக் குமாரத்திகளாகக் கொடுப்பேன், உன்னுடைய உடன்படிக்கையைப் பார்த்துக் கொடுப்பதில்லை. உன்னோடே என் உடன்படிக்கையைப்பண்ணி ஏற்படுத்துவேன், அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிவாய்" (எசேக்கியேல் 16:60-62)

மூத்த சகோதரிகள் என்பது வரலாற்றில் இஸ்ரயேலுக்கு முந்தைய நாடுகளைக் குறிக்கிறது, மேலும் "இளைய" சகோதரிகள் இஸ்ரேயல் ஒரு தேசமாக நிறுவப்பட்ட பிறகு வந்த நாடுகளைக் குறிக்கின்றனர். பெற்றோர் வளர்ப்பு என்ற கருத்தை கவனியுங்கள் !இஸ்ரயேல் உலக நீதிக் கல்வியின் மையமாக இருப்பதால், அங்கு ஒரு கற்பித்தல் மற்றும் வளர்ப்பு இருக்கும்.

பழைய ஏற்பாட்டு முற்பிதாக்களின் உதவி மற்றும் வழிகாட்டுதலுடன், இஸ்ரயேலின் இந்த பரிசுத்தவான்கள், வெறுப்பையும் மதவெறியையும் புரிந்துகொள்வார்கள். அவர்கள் ஒரு காலத்தில் அனுபவித்த சமூக அழுத்தத்தை ( விரும்பப்பட வேண்டும் என்ற ஆசை மற்றும் காமத்தின் வஞ்சனையை )நினைவில் கொள்வார்கள். இதன் விளைவாக, பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் பொறுமையுடன் கற்பிக்கவும், அன்புடன் வளர்க்கவும், ஒவ்வொரு இருதயத்தையும் மீட்டெடுக்கும் பணியில் உதவவும் தயாராக இருப்பார்கள்.

மேலும், இராஜ்யத்தின் ஆசீர்வாதங்கள் அவர்களுக்கும் வரும் என்பதை அறிந்து கடவுள் - கிறிஸ்து, சபை மற்றும் பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் மூலம்,இஸ்ரயேலை நேசிக்கவும், அவளுடன் மகிழ்ச்சியடையவும் உலகத்தை அழைப்பார். "எருசலேமை நேசிக்கிற நீங்களெல்லாரும் அவளோடேகூடச்

சந்தோஷப்பட்டு, அவளைக்குறித்துக் களிகூருங்கள், அவள் நிமித்தம் துக்கித்திருந்த நீங்களெல்லாரும் அவளோடேகூட மிகவும் மகிழுங்கள். நீங்கள் அவளுடைய ஆறுதல்களின் முலைப்பாலை உண்டு திருப்தியாகி, நீங்கள் சூப்பிக்குடித்து, அவளுடைய மகிமையின் பிரகாசத்தினால் மனமகிழ்ச்சியாகுங்கள். கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால் - இதோ, நான் சமாதானத்தை ஒரு நதியைப்போலவும், ஜாதிகளின் மகிமையைப் புரண்டு ஓடுகிற ஆற்றைப்போலவும் அவளிடமாகப் பாயும்படி செய்கிறேன். அப்பொழுது நீங்கள் முலைப்பால் குடிப்பீர்கள், இடுப்பில் வைத்துச் சுமக்கப்படுவீர்கள், முழங்காலில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள். " (ஏசாயா 66:10-12)

**ஏசாயா 19**

ஏசாயாவின் 19 வது அதிகாரம், அந்த நேரத்தில் உலகிற்குக் காண்பிக்கப்படும் என்று வாக்குறுதி அளிக்கும் மற்றொரு தீர்க்கதரிசன விவரத்தையும் வெளிப்படுத்துகிறது. இது நம்முடைய ஆதார வசனத்தின் தீர்க்கதரிசன அறிமுகம் - "அக்காலத்திலே எகிப்துதேசத்தின் நடுவிலே கர்த்தருக்கு ஒரு பலிபீடமும், அதின் எல்லையருகே கர்த்தருக்கு ஒரு ஸ்தம்பமும் உண்டாயிருக்கும். அது எகிப்து தேசத்திலே சேனைகளின் கர்த்தருக்கு அடையாளமும் சாட்சியுமாயிருக்கும், ஒடுக்குகிறவர்களினிமித்தம் அவர்கள் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுவார்கள்,



அப்பொழுது அவர்களுக்கு ஒரு இரட்சகனையும், ஒரு பெலவானையும் அனுப்பி அவர்களை விடுவிப்பார்." (ஏசாயா 19:19-20)

யேகோவா தேவனுக்குச் சாட்சியாக இருக்கும் இந்தச் சாட்சி, ஒரு "பலிபீடம்" என்றும் விவரிக்கப்படுகிறது. அதன் இருப்பிடம் எகிப்து தேசத்தில், குறிப்பாக எகிப்தின் "நடுவில்" மற்றும் "எல்லையில் " உள்ளது. எகிப்தின் கிசாவில் உள்ள மா பெரும் பிரமிடு, இதுவரை கட்டப்பட்ட மிக அற்புதமான கட்டமைப்புகளில் ஒன்றாகும். இந்த அமைப்பு ஏசாயா 19 - ஆம் அதிகாரத்தின் "பலிபீடம் " ஆகும். இதை யார் கட்டினார்கள், எப்படி கட்டினார்கள் என்பது இன்னும் ஒரு பொறியியல் மர்மமாகவே (இரகசியம்) உள்ளது. ஆனால் அது ஏசாயா தீர்க்கதரிசி கொடுத்த விளக்கத்திற்கு ஒத்துப்போவதால் நம் கவனத்தை ஈர்க்கிறது.

மேலே உள்ள மற்றும் விளக்கப்படம், மாபெரும் பிரமிடு எகிப்து நாட்டின் எல்லலையிலும் நடுவிலும் எவ்வாறு அமைந்துள்ளது என்பதைக் காட்டுகிறது. பொருள் ஒரு அடையாளமாகவும் சாட்சியாகவும் இருக்கும்என்பதற்கான வேதப்பூர்வ வாக்குறுதியைப் பெறுத்தவரை, உட்புறப் பகுதி அமைப்பு யெகோவா தேவனின் திட்டத்திற்கு ஒரு குறியீட்டு (அடையாள) சாட்சியாகும்.

பெரிய பிரமிடின் உட்புறப் பாதைகளின் வடிவமைப்பு, மனிதன் பாவத்தில் விழுதல், மனிதனை மீட்டெடுக்க மேசியாவின் வருகை, சுவிசேஷ யுகத்தின் உயர்ந்து அழைப்பு, தெய்வீக இயல்பின் வெகுமதி மற்றும் மனிதனை மனித பரிபூரணத்திற்கு மீட்டெப்பது ஆகியவற்றை அடையாளமாக சித்தரிக்கிறது.

ஆயிரமாண்டு யுகத்தில், கடவுள் தனது ஞானத்தால், தனது இராஜ்யத்தின் மர்மங்களை வெளிப்படையான பார்வையில் மறைத்து வைத்தார் என்பதற்கான ஒரு பௌதீக நினைப்பூட்டலாக இந்த பெரிய பிரமிடு இருக்கும். (ஏசாயா19:19-20 )ஒரு பலிபீடத்திற்கு செல்வது போல, கடவுளை வணங்குவதற்காக மக்கள் அணிகள்சந்தேகத்திற்கு




இடமின்றி பெரிய பிரமிடுக்குச் செல்வார்கள்.

ஏசாயாவின் தீர்க்கதரிசனம் ஒரு "பலிபீடத்தைப்" பற்றிப் பேசுகிறது, அங்கு பலிகள் விலங்குகளாக இருக்காது, ஆனால் நொறுங்கிய இருதயங்களும் சாந்தகுணமுள்ள ஆவிகளும் பலியிடப்படும். இந்த ஆவிக்குரிய பலிகளும் இருதய பக்தியும் - கடவுளுக்கு ஏற்புடையவர்களாக தனிநபர்கள் தங்களை நிரூபிப்பதற்கான வழியாக இருக்கும். (ஏசாயா 57:15, 66:2)

கடவுளை வணங்குவதற்காக மகா பிரமிடுக்கு யாத்திரை மேற்கொள்ளும் உயிர்த்தெழுப்பப்பட்ட பில்லியன் கணக்கானவர்களுக்கு கிடைக்கும் நன்மை மகத்தானது. அவர்கள் அதன் நடைபாதையைக் கடந்து செல்வதை கற்பனை செய்து பாருங்கள், யுகங்களின் தெய்வீகத் திட்டத்தை அதன் உட்புற இடைவெளிகளில் பௌதீகமாக நகர்த்துவதன் மூலம் மீண்டும் உயிர்ப்பிக்கிறார்கள். கடவுள் 4,000 ஆண்டுகளுக்கு முன்பு இந்த குறிப்பிட்ட நோக்கத்திற்காகவே அங்கு பெரிய பிரமிட்டை நிறுவினார் என்பதை அவர்கள் உணர்ந்திருப்பது, அவர் மீதான அவர்களின் ஆவிக்குரிய வழிபாட்டு உணர்வையும் பயபக்தியையும் அதிகரிக்கும். (ஏசாயா 2:2-4)

ஒரு பொருளில் பொதிந்துள்ள மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட நினைவுகள் அர்த்தத்தால் வளப்படுத்தப்படுகினறன. இஸ்ரயேலுக்கும் பெரிய பிரமிடுக்கும் யாத்திரை மேற்கொள்வதன் மூலம் மனுக்குலம் தங்கள் நம்பிக்கையை வலுப்படுத்தி கடவுளிடம் தங்களை அர்ப்பணித்தக் கொள்ள என்ன ஒரு ஆழகான வாய்ப்பு. ஆபிரகாமின் சந்ததியினரை ஒரு ஆசீர்வாதமாகத் தேர்ந்தெடுத்து, தம்முடைய திட்டத்தை மகா பிரமிட்டின் பாதைகள் மற்றும் அறைகளுக்குள் மறைத்து வைத்ததால் இது சாத்தியமானது.

## மாம்சமான மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேலர்

இஸ்ரயேல் உண்மையில் கடவுளின் சுதந்தரம், மாம்சத்தின்படி இஸ்ரயேல் - ஆபிரகாமின் சந்ததியினர் - மற்றும் ஆவிக்குரிய இஸ்ரயேல், மகிமையில் உள்ள திருச்சபை, அவருடைய தெய்வீக குடும்பம். "தாம் நம்மை அழைத்ததினாலே நமக்கு உண்டாயிருக்கிற நம்பிக்கை இன்னதென்றும், பரிசுத்தவான்களிடத்தில் தமக்கு உண்டாயிருக்கிற சுதந்தரத்தினுடைய மகிமையின் ஐசுவரியம் இன்னதென்றும்.." (எபேசியர்1:18)

“having the eyes ofyour heart enlightened, that ye may know whatis the hope of his calling, what the riches of theglory of his inheritance in the saints” (Ephesians 1:18).

### இராஜ்யத்திற்கு ஆயத்தப்படுத்துதல்

# இஸ்ரயேலின் பரிசுத்தமாக்குதல்



"ஆகையால் பூமி நிலைமாறினாலும், மலைகள் நடுச்சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதின் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதின் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும், நாம் பயப்படோம். " (சங்கீதம் 46:2-3)

— Todd Alexander

இன்று, இஸ்ரயேல் தேசம் உலகளாவிய வர்த்தகத்துடன் இறுக்கமாக இணைக்கப்பட்டுள்ளது.

அதன் தனிநபர் மொத்த உள்நாட்டு உற்பத்தி மற்றும் மிகவும் வளர்ந்த நாடுகளுடன் ஒப்பிடத்தக்கது, இது உலகளவில் முதல் 20 இடங்களுக்குள் இடம்பிடித்துள்ளது.

இஸ்ரயேல் அதன் புதுமை மற்றும் தொழில்நுட்பத்திற்காக அறியப்படுகிறது, இது ஒரு செழிப்பான தொடக்கப் பொருளாதாரத்திற்கு வழிவகுக்கிறது மற்றும் குறிப்பிடத்தக்க வெளிநாட்டு முதலீட்டை ஈர்க்கிறது. இது விஞ்ஞானிகள், பொறியாளர்கள், துணிகர மூலதன முதலீடுகள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் எண்ணிக்கையில் உயர்ந்த இடத்தில் உள்ளது. பல வழிகளில், சிறிய இஸ்ரயேல் தேசம் நிறுவப்பட்டதிலிருந்து வெறும் 77 ஆண்டுகளில் பெரும் பாலான நாடுகளை விட உயர்ந்துள்ளது. அனால் இந்த மதச்சார்பற்ற வெற்றி இஸ்ரயேல் தேசத்திற்கான கடவுளின் திட்டத்தின் ஒரு பகுதி மட்டுமே.

## இஸ்ரயேலைப் பிரித்து வைத்தல்

இஸ்ரயேலைப் பரிசுத்தப்படுத்த வேண்டும் என்ற கடவுளின் விருப்பம், அதை மற்ற தேசங்களிலிருந்து வேறுபடுத்திக்காட்டும். பரிசுத்தப்படுத்தும் செயல் முறை கிபி 1878முதல் நடந்து வருகிறது. திரும்பி வந்த நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ,இஸ்ரயேல் தேசத்தை மீட்டெடுத்து, அதை தேவனுடைய இராஜ்யத்தின் பூமிக்குரிய தலைநகராக மாற்றுவார். பூமியிலுள்ள எல்லா தேசங்களையும் ஆசீர்வதிக்க இஸ்ரயேலைப் பயன்படுத்துவதே அவருடைய நோக்கம். (ஆதியாகமம்22:18, தானியேல் 12:1-3)

## புறஜாதியாரின் காலம்

"புறஜாதியினரின் காலம்" என்ற சொல், கிமு 607 முதல் 1914 வரை இஸ்ரயேலின் தேசிய தண்டனைக் காலத்தை விவரிக்கிறது, இது முதலாம் உலகப் போரின் தொடக்கமாகும். இது பால்ஃபோர் பிரகடனத்திற்கு வழிவகுத்தது. பின்னர் இஸ்ரேயல் 1948 இல் தனது தேசிய சுதந்திரத்தை மீண்டும் பெற்றது.

லேவியராகமம் 26 -ல், இஸ்ரயேல் தன் பாவங்களுக்காக தண்டிக்கப்படும் என்று கடவுள் முன்னறிவித்தார். அவர் எச்சரிக்கையை நான்கு முறை திரும்பத் திரும்பச் சொன்னார். (வசனங்கள்18, 21, 24, 28 )இந்த நான்கு மறுநிகழ்வுகளும், இஸ்ரயேல் தேசத்தை ஒருநாள் ஆட்சி செய்ய இருந்து நான்கு பேரரசுகளுடன் ஒத்துப்போகின்றன.

அவளுக்கு "ஏழு மடங்கு" தண்டனை கிடைக்கும் என்றும் கடவுள் சொன்னார். ஒரு தீர்க்கதரிசன "காலம்" என்பது 360 ஆண்டுகளுக்குச் சமம், (ஒரு காலம் என்பது ஒரு வருடத்திற்கு சமம், 360 நாட்களைக் கொண்டது)எனவே, ஏழு மடங்குகள் (7 x 360) என்பது 2,520 ஆண்டுகள் ஆகும். 1914 ஆம் அண்டு நமது கர்த்தர் இஸ்ரயேல் மீதான புறஜாதி ஆதிக்கத்தை நீக்கும் செயல்முறையைத் தொடங்கியபோது, புறஜாதி காலங்களின் முடிவு வந்தது.

நமது கர்த்தரின் வருகையைப் பற்றிப் பேசும்போது, தீர்க்கதரிசி தானியேல், இயேசு தம்முடைய ஜனமாகிய இஸ்ரயேலுக்காக நின்ற

வேலையை விவரித்தார். அதே சூழலில், "யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்" என்று அவர் முன்னறிவித்தார். (தானியேல் 12:1)எனவே, இஸ்ரயேலை மீட்டெடுப்பதற்கும், புறஜாதி நாடுகளை மீண்டும் அகற்றுவதற்கும் நெருங்கிய தொடர்புடையவை.

நாம் இப்போது 111 வருடங்களாக உபத்திரவ காலத்தில் இருக்கிறோம், இறுதி அர்மகெதோன் போர் நமக்கு முன்பாக உள்ளது. சுவிசேஷ யுக திருச்சபை முடிந்ததும் இஸ்ரயேலின் குருட்டுத்தன்மை நீக்கப்பட்டு, இஸ்ரயேலர் அனைவரும் இரட்சிக்கப்படுவார்கள். (ரோமர் 11:25-26)

### விசுவாசம் ஒரு வரம்

இறுதி எழுச்சி நெருங்கிவிட்டாலும், அதன் நோக்கமும் அதைத் தொடர்ந்து என்ன நடக்கும் என்பதும் கடவுளால் பரிசுத்தப்படுத்தப் பட்டவர்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது.

அவருடைய திட்டத்தின் இரகசியம்வெளிப்படும் என்பதில் நம்பிக்கை வைத்து, அதன் சமாதானத்தின் முன்னறிவிப்பை அனுபவிப்பவர்கள்.

● விசுவாசத்தினாலே, 1878 முதல் இஸ்ரயேலுக்கு கடவுளின் கிருபை திரும்புவதையும், தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றமாக உலக யூதர்கள் தங்கள் தேசத்திற்குத் திரும்புவதற்கான





ஆகியவற்றில் உச்சத்தில் வைத்திருக்கிறது. (சகரியா 12:6)

● விசுவாசத்தினாலே, தேவன் இஸ்ரயேலை "தம்முடைய கண்மணியைப் போல" வைத்திருப்பதையும், அவர்களுக்குத் தீங்கு செய்ய விரும்புவோர் அழிவைச் சந்திப்பதையும் நாம் காண்கிறோம். (சகரியா2:8-9)

● விசுவாசத்தினால், இஸ்ரயேல் மக்கள் அமைதியுடனும் சுயநிர்ணயத்துடனும் வாழக்கூடிய ஒரு தேசிய வீட்டை தொடர்ந்து வளர்த்துக் கொள்ளும்போது, அவர்களில் ஒரு அசைக்க முடியாத மனப்பான்மையைக் காண்கிறோம். (எரேமியா31:27-28)

இருப்பினும், விசுவாசம் என்பது கடவுளின் பரிசுத்தப்படுத்தும் வல்லமைக்கு தங்களைக் கீழ்ப்படுத்துபவர்கள் அனுபவித்து போற்ற வேண்டிய ஒரு பரிசு. நவீன கால இஸ்ரயேல் தேசம் இன்னும் விசுவாசத்தின் முழு ஆசீர்வாதங்களையும் உணரவில்லை, அவர்கள் கடவுளின் வல்லமையை நம்பியிருக்கவில்லை. இது சுவிசேஷ யுகம் சபை முடிந்த பிறகு வரும். (ரோமர் 11:25-27)

## இன்னும் "சுவாசம்" இல்லாத இஸ்ரயேல்

எசேக்கியேலின் உலர்ந்த எலும்புகளின் பள்ளத்தாக்கு தீர்க்கதரிசனம் இஸ்ரயேலர் படிப்படியாக உயிர் பெறுவதைக் குறிக்கிறது. எலும்புகள் ஒன்று சேர்க்கப்படுகின்றன, நரம்புகள் சேர்க்கப்படுகின்றன, அதே நேரத்தில் சதை மற்றும் தோல் பின்தொடர்கின்றன.இறுதியாக காற்று கட்டளையிடப்பட வேண்டும் - "நீ காற்றுத்திசை நான்கிலுமிருந்துவந்து, கொலையுண்ட இவர்கள் உயிரடையும்படிக்கு இவர்கள்மேல் ஊது என்கிறார்...என் ஆவியை உங்களுக்குள் வைப்பேன் நீங்கள் உயிரடைவீர்கள்... அப்பொழுது நான் கர்த்தர் என்று அறிந்துகொள்வீர்கள்...." (எசேக்கியேல் 37:9, 13-14)

வாழ்க்கையின் அற்புதமான எதிர்பார்ப்பு சகரியா தீர்க்கதரிசியால் மேலும் விவரிக்கப்படுகிறது. "நான் தாவீது குடும்பத்தாரின் மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன், அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன் தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்." (சகரியா 12:10)

உயிர்பெறுவதற்கான இந்த இறுதிப் படி, இஸ்ரயேல் இயேசுவை தங்கள் மேசியாவாக அங்கீகரிப்பதையும்,அவளுடைய கடந்தகால பாவங்களுக்காக தேசிய அளவில் துக்கப்படுவதையும் குறிக்கும். இந்த முக்கியமான படிகள் இஸ்ரயேலின் பரிசுத்தப்படுத்தலின் இன்னும் பெரிய முன்னேற்றத்தைக் காணும். பெரிதும் துன்பப்பட்ட மக்களுக்கு கடவுளின் வளமான வாக்குறுதிகள் ஒரு மகிமையான எதிர்காலத்தை முன்னறிவிக்கின்றன.

## யேகோவா தேவனின் உத்தரவாதம்

நவீன கால இஸ்ரயேல் தேசத்தின் மீது கடவுளின் கிருபையும் கருணையும் அவர்களின் பிரதாக்களான பழைய ஏற்பாட்டின் முற்பிதாகளின் விசுவாசத்தின் விளைவாகும். இதை அப்போஸ்தலன் பவுல் உறுதிப்படுத்துகிறார். "சுவிசேஷத்தைக்குறித்து அவர்கள் உங்கள் நிமித்தம் பகைஞராயிருக்கிறார்கள், தெரிந்து கொள்ளுதலைக் குறித்து அவர்கள் பிதாக்களினிமித்தம் அன்புகூரப்பட்ட வர்களாயிருக்கிறார்கள். தேவனுடைய கிருபைவரங் களும், அவர்களை அழைத்த அழைப்பும் மாறாதவைகளே, ஆதலால், நீங்கள் முற்காலத்திலே தேவனுக்குக் கீழ்ப்படியாதிருந்து, இப்பொழுது அவர்களுடைய கீழ்ப்படியாமையினாலே இரக்கம் பெற்றிருக் கிறதுபோல, அவர்களும் இப்பொழுது கீழ்ப்படியாம லிருந்தும், பின்பு உங்களுக்குக் கிடைத்த இரக்கத்தினாலே இரக்கம் பெறுவார்கள்." (ரோமர் 11:28-31)

## அர்மெகேதோன் மற்றும் இஸ்ரயேலின் குருட்டுதன்மை நீக்கப்படுதல்

இறுதி நியாயத்தீர்ப்புக்காக, இறுதி அர்மகெதோன் போரின் போது கடவுள் தேசங்களை யோசபாத்தின் பள்ளத்தாக்குக்குக் கொண்டுவருவார். அவர்கள் தோற்கடிக்கப்பட்டு, கடவுளுடைய ஜனங்களுக்கு எதிரான கடந்தகால பாவங்களுக்காகக் கணக்குக் கொடுப்பார்கள். (யோயேல் 3:2) கடவுளின் இறுதி விடுதலையை சகரியாக தீர்க்கதரிசி விவரிக்கிறார். "கர்த்தர் புறப்பட்டு, யுத்த நாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே போராடுவார்." (சகரியா 14:3)

அழிவைத் தொடர்ந்து பெரும் ஆசீர்வாதங்களும் மகிழ்ச்சியும் ஏற்படும். "அப்பொழுது ஜனங்களெல்லாரும் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஒருமனப்பட்டு அவருக்கு ஆராதனை செய்யும்படிக்கு, நான் அவர்கள் பாஷையைச் சுத்தமான பாஷையாக மாறப்பண்ணுவேன். சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு, இஸ்ரயேலரே, ஆர்ப்பரியுங்கள், எருசலேம் குமாரத்தியே, நீ முழு இருதயத்தோடும்



மகிழ்ந்து களிகூரு.கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார், இஸ்ரயேலின் இராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார், இனித் தீங்கைக் காணாதிருப்பாய். " (செப்பனியா 3:9, 14, 15)

இஸ்ரயேல் தேசம் தேவனுடைய பரிசுத்தப்படுத்தும் வல்லமைக்குக் கீழ்ப்படிந்து, அதன் மூலம் விசுவாசத்தால் நிறைந்திருக்கும். (எரேமியா 31:31-34)ஒரு காலத்தில் வெறுக்கப்பட்டு துன்புறுத்தப்பட்ட இஸ்ரயேல் மக்கள், உலகை தங்கள் வீட்டு வாசலில் வரவேற்பார்கள். உண்மையுள்ள யூதர்கள் மதிக்கப்படுவார்கள், தேடப்படுவார்கள். "அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள். அந்நாட்களில் பலவித பாஷைக்காரராகிய புறஜாதியாரில் பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு, தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம், ஆகையால் உங்களோடே கூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றார்." (சகரியா 8:22, 23)

எனவே, புறஜாதி தேசங்களை வீழ்த்தும் பெரும் உபத்திரவக் காலம், யேகோவா தேவனின் தயவிலும் பரிசுத்தப்படுத்தும் வல்லமையிலும் இஸ்ரயேலின் எழுச்சியுடன் ஒத்துப்போகிறது என்பதை விசுவாசத்தால் நாம் காண்கிறோம்.

இந்தத் தீர்க்கதரிசனங்களிலிருந்து நாம் கற்றுக்கொள்கிறது-

- யோசபாத்தின் பள்ளத்தாக்கில் போரிடுவதற்காக பல்வேறு புறஜாதி தேசங்களை கடவுள் ஒன்று சேர்ப்பார்.
- இஸ்ரயேல் ஆரம்பத்தில் தங்கள் சொந்த பலத்தில் போரிட்டு போரில் தோற்றுப்போவதைக் காண்பார்கள்.
- பின்னர் இஸ்ரயேல் தாங்கள் ஆபத்தில் இருப்பதை உணர்ந்து உதவிக்காக கர்த்தரிடம் திரும்பும்.
- கடவுள் இஸ்ரயேலைக் காப்பாற்றி, பழங்காலத்தைப் போலவே போரிடுவார்.
- இஸ்ரேலின் குருட்டுத்தன்மை நீக்கப்படும், உலகம் இஸ்ரயேலின் இரட்சிப்பைக் காணும்.
- இந்தச் செயல்முறையின் ஒரு பகுதியாக, பூமியின் மக்கள் தங்கள் சொந்த இரட்சிப்புக்காக இஸ்ரயேல் தேசத்தை நோக்கிப் பார்ப்பார்கள். (சகரியா8:23)

## இஸ்ரயேலின் பிதாக்களின் உயிர்த்தெழுதல்

இஸ்ரயேல் தேசத்தை, விசுவாசத்தை நோக்கி வழிநடத்த, இஸ்ரயேலின் உண்மையுள்ள பிதாக்களை (முற்பிதாக்களை ) யேகோவா தேவன் உயிர்த்தெழுப்புவார். அவர்கள் இஸ்ரயேல் தேசத்தை தேசங்களிடையே மதச்சார்பற்ற வெற்றியின் மீதான நம்பிக்கையிலிருந்து விலக்கி, நீதியை நோக்கி இஸ்ரயேலின்

பரிசுத்தப்படுத்தும் பணியைத் தொடர்வார்கள். (ஏசாயா 1:26,மீகா5:5)

நாளை, பழைய ஏற்பாட்டு, ஆண்களும் பெண்களும் சந்தேகத்திற்கு இடமின்றி தங்கள் பரிசுத்தமாக்கலுக்கு சாட்சியமளிப்பார்கள், மேலும் இஸ்ரயேலருக்கு அவர்கள் எவ்வாறு கடவுளின் கையால் வழிநடத்தப்பட்டனர் என்பதைக் காண்பிப்பார்கள். அவர்கள் இஸ்ரயேல் மக்களுக்கு கடவுளின் வாக்குறுதிகளை நினைப்பூட்டுவார்கள், மேலும் அவர்களின் இரட்சிப்பு அவர்களின் பரலோகத் தந்தையின் கையால் மட்டுமே வரும் என்பதை நம்ப வைப்பார்கள். பழைய ஏற்பாட்டு முற்பிதாக்கள் தங்கள் சொந்த கீழ்ப்படிதல், தியாகம் மற்றும் போராட்டம் மூலம் கடவுளின் பரிசுத்தப்படுத்தும் வல்லமைக்கு அடிபணிவதற்கான ஒரு மாதிரியை வழங்குவார்கள். அவர்கள் இஸ்ரயேலை மதச்சார்பற்ற வெற்றிக்காக பாடுப்படுவதிலிருந்து விலக்கி, உலகிற்கு யேகோவா தேவனின் வாய்மொழியாக மாற வழிநடத்துவார்கள். "திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து - நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள், அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள், ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்." (ஏசாயா2:3 , மீகா 4:1-2)

# நம்பிக்கையின் பள்ளத்தாக்கு

நிழல் மறைந்திருக்கும் ஆழமான பள்ளத்தாக்கில், கண்முன் விரியும் ஓர் காட்சியில்,
சிதறிக் கிடக்கும் எண்ணற்ற, திரளான உலர்ந்த எலும்புகள், ஒரு தேசத்தின் நம்பிக்கை,
மங்கிக்கொண்டிருக்கும் ஓர் கடந்த காலம், ஆனால் தேவனின் வாக்குறுதியோ, என்றென்றும் நிலைத்திருக்கும்,

கர்த்தருடைய சொந்தக் கரமானது, வழிகாட்டும் ஒளியாய், எசேக்கியேலை இத்துயர்மிகு காட்சியின் வழியாய் வழி நடத்துகிறது, "இந்த எலும்புகள் உயிர் அடையுமா ?" என்ற கேள்வி ஒலிக்கிறது, விசுவாசத்தின் ஒரு சோதனை, பதிலைக் கொண்டு வருகிறது, "ஓ, கர்த்தரே, ஜீவனைக் கொண்டு வரும் நம்பிக்கையை நீர் அறிவீர்."

வல்லமையால் ஏவப்பட்டு, தீர்க்கதரிசி சொல்கிறார், "சம்பவிக்கப்போவதை கர்த்தர் உரைக்கிறார் கேளுங்கள், "உங்கள் புழுதியின் மேல் நான் ஜீவனை ஊதுவேன், உங்களது பலத்தை, உங்களது நம்பிக்கையை, உங்களது விருப்பத்தை, நான் மீட்பேன், பல காலமாய் இல்லாமல் போயிருந்த தேசம் புதிதாய் பிறந்தது,"

கணுக்கள் இணைகிறது, தசைகள் உருவமாகிறது, வலிமைமிக்க ஒரு இராணுவமாக,
பலமுள்ள, தீர்க்கத்தோடும், தேவ சுவாசமானது, ஒரு வேகமான காற்றாய் வீதி, உயிரோடு எழுப்புகிறது, மரணம் இருந்த இடத்தில், தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட, நேசிக்கப்பட்ட இஸ்ரயேல் எழுகிறது.

இந்த அதிசயம், மிகவும் அன்பாகக் காப்பாற்றப்பட்ட, தேவ உடன்படிக்கையின், மிகவும் தெளிவான ஒரு சின்னம், ஆசீர்வதிக்கும் ஒரு வித்தைக் குறித்து, முன் காலத்தில் ஆபிரகாமுக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம், தலை முறைகளைக் கடந்தே, வெளிப்படுத்துவதற்கு சொல்லப்பட்ட ஒரு சரிதம்,

ஆனால் எங்கள் கண்களுக்கு முன் ஒரு எதிர்கால நம்பிக்கையாக, இன்னும் மிகப்பெரியவாக்குறுதி உள்ளது, அப்போது பூமி முழுவதும் அவருடைய கிருபையை அறிந்து, ஒவ்வொரு தேசமும், ஜாதியும், இனமும் அவருடைய பரிசுத்த கிருபையில் குணமடையும், அப்போது ஏதேனின் அமைதி மீண்டும் மலரும், ஜீவநதி,ஒரு பளிங்கு நீரோடை, சுகமளிக்கும் விருட்சம், ஒரு ஒளிக்கதிரின் பிரகாசம் வழியாக தேவனின் சொந்த இராஜ்யம் மின்னும், அவரது மகிமை வெளிப்பட்டது, அற்புதமானதொரு கனவு,

அறியப்படாத எழுத்தாளர்.